உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 31 | பரிதாபி - ஐப்பசி - 10—11—72 | இதழ் 12

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## குரு லிங்க சங்கமம்

### சைவத்தின் சிறப்பு

சைவ சமயம் எந்த ஒன்றையும் முன்னென்று பின்னென்ருக மாறுபடக் கூருமல், முன்னர்க்கூறிய அதனையே பின்னும் பின்னும் இறுதி வரையில் வலியுறுத்திக் கூறும். 'பதி. பசு, பாசம்' என்று பொருள்கள் மூன்று உள்ளன என்ருல், அவை என்றும் உள்ளன என்றே கூறுதலன்றி. அவற்றுள் ஒன்ருே இரண்டோ' 'முன்னே உள்ளனவாய்ப் பின் இல்லாது மறைந்தொழியும்' என்று மாற்றிக் கூறுதல் இல்லை. 'உலகின்பம், வீட்டின்பம்' என்ற இருவகை இன்பத்தையும் இறைவனே தருவான், அதனல், உயிர்கட்கு இறைவன் என்றுமே துணையாவதன்றி, ஒரு காலத்துத் துணையாயிருந்து, மற்ருெரு காலத்தில் அவ்வாறின்றி நீங்குவான் என்ருே, அல்லது ஒரு காலத்தில் நீங்கியிருந்து, பின்னெரு காலத்தில் உற்ற துணையாய் வந்து

உதவுவான் என்றே சைவ சமயம் கூறுவதில்லை. இவ்வாறே, 'உயிர்கள் நலன் அடைதற்குத் தொடக்க நிலையிலும் முடிந்த நிலையிலும் வழியாய் அமைவது இறைவழிபாடு ஒன்றே' எனவும், 'அவ் வழிபாடு, குரு, லிங்கம், சங்கமம் என மூன்றிடங்களில் அமையும்' எனவும் சைவ சமயம் வரையறுத்துக் கூறும்.

" தாபர சங்க மங்கள்
எனும்இரண் டுருவில் நின்று
மாபரன் பூசை கொண்டு
மன்னுயிர்க் கருளை வைப்பன் "

என்பது சிவஞான சித்தி. 'இதில் குருவடிவம் சங்கமத்துள் அடக்கப்பட்டது' என்பது, அந்நூலின் இறுதியில், இலிங்க வழிபாடு, சங்கம வழிபாடுகளுடன். குரு வழிபாட்டினை வேறெடுத்துக் கூறுதலால் நன்கறியப்படும். "மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க்கு அருளை வைப்பன்" என்பதில் "அருள்" என்றது, 'உலகின்பம், வீட்டின்பம்' என்னும் இரண்டையும் தரும் அருளைப் பொதுப்படக் கூறியதாம்.

## குரு வடிவம்

'குரு, லிங்கம், சங்கமம்' என்னும் மூன்றில் குரு வடிவமாவது, ஒவ்வொருவர்க்கும் அவர்க்குத் தெரியாத ஒன்றைத் தெரிவிக்கின்ற ஒருவரது வடிவமாம். எனவே, 'ஞானத்திற்கு மட்டுந்தான் குரு வேண்டப்படுகிறார்' என்பதில்லை. உலகியலிலும் அனைத்துத் துறைகட்கும் குரு வேண்டப்படுகிறார் என்பது தெளிவாகும். இதனால், உலகில் உள்ள யாவரும் தம்மை அறிந்தோ அறியாமலோ குருவை உடையவர்களாகவே இருத்தல் அறியப்படும்.

யாவர்க்கும் முதல்முதல் அறிவைத் தருபவர் தாய், தந்தையர். அதனால், அவ்விருவர்க்கும் 'இருமுது குரவர்' என்பது பெயர். அதன்பின் எழுத்தறிவிக்கின்ற ஆசிரியர் குருவாகின்றார். அதன்பின், அவரோ வேறு சிலரோ உயர்கல்வி கற்பிக்கும் ஆசிரியராகின்றனர். பின்னர் வாழ்க்கைக்கு வேண்டும் தொழிலைப் பயிற்றுவிப்பவர் ஆசிரியராகின்றார். அரசியலிலும் சிலர்க்குச் சிலர் குருவாய் அமைவதைப் பார்க்கின்றோம். இப்படி எல்லா வகையிலும், எப்பொழுதும் ஒருவர்க்கு ஆசிரியர் வேண்டப்படுவது அனுபவமான நிகழ்ச்சி. "தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் தெரியாது" என்ற பழமொழிப்படி, எந்தத் துறையிலும், யாருக்கும் குரு இல்லாமல் எதுவும் விளங்குதற்கில்லை.

இயல்பிலே நமக்கு விளங்கக் கூடிய உலகியலுக்கே இவ்வா றென்ருல், எளிதில் விளங்காத ஞானத்திற்குக் குரு இல்லாமல் இயல்வது எப்படி என்பதை உமாபதி சிவாசாரியார் தமது திருவருட் பயனில்,

“ எமக்கென் எவனுக்கு எவைதெரியும், அவ்வத்
தமக்கவனே வேண்டத் தவிர் ”

என்று கூறுகின்ருர். இன்னும் அவர் அந்நூலில், ‘குரு இல்லாமல் ஞானத்தைப் பெறுதல் இயலாது’ என்பதை,

“ ஞானம் இவனெழிய நண்ணியிடும், நற்கல் அனல்
பானு ஒழியப் படின் ”

என விளக்கியுள்ளார். எனவே, எவரொருவர்க்கும் ஞானம் குரு இல்லாமல் வாராது என்பது விளங்கும்.

இனி, ‘குரு இறைவனே’ என்று நூல்கள் கூறுகின்றன. அதற்குக் காரணம், ‘எல்லா உயிர்களுமே ஒருவர் அறிவித்தால் அன்றித் தாமே அறிந்து கொள்ளும் இயல்புடையன அல்ல’ என்பது, மேலே “தொட்டுக்காட்டாத வித்தை சுட்டுப் போட்டா லும் வாராது” என்ற பழமொழியினுலே விளங்கும். ‘ஒருவர்க்கு அவர் குருஞானத்தைக் கொடுத்தார்’ என்ருல்; ‘அக்குருவுக்கு ஞானம் எப்படிக் கிடைத்தது’ என்ற வினு எழுகின்றது’ ‘அதற்கு அவருடைய குருவால் அவருக்கு ஞானம் கிடைத்தது’ என்று கூறினுல், ‘அவருக்கு எப்படிக் கிடைத்தது’ என்று மேலும் வினு எழும். இவ்வாறே தொடர்ந்து சொல்லிக் கொண்டுபோனுல், முடிவில்லாமற் போகும். எனவே, ‘உயிர்கள் அறிவித்தால் அறியும் தன்மை உடையன; இறைவன் அவ்வா றன்றித் தானே அறியவும், உயிர்களுக்கு அறிவிக்கவும் வல்லவன். அதனுல், அவனே அனைத்துயிர்க்கும் குருவாய் இருந்து. அவற்றின் பக்குவ நிலைக்கு ஏற்பப் பலவற்றை அறிவித்து வந்து, முடிவில் ஞானத்தையும் தருகின்ருன்’ என்பதுதான் நேரான விடை. இதனை உணர்ந்து பார்க்கும்பொழுது, ‘குரு இறைவனே’ என்பது உண்மையாகின்ற தன்றே! இக்கருத்துப் பற்றியே, “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்”, “எழுத்தறி வித்தவன் இறைவ னுகும்” “தெய்வத்தைப் போல மதிப்பான் திரிபில்லான் - இவ்வாறு மாண்பும் உடையார்க் குரைப்பவே - செவ்விதின் நூலைத் தெரிந்து” என்ருற்போலும் அறவுரைகள் எழுந்தன. “அம்மையப்ப ரேஉலகுக் கம்மையப்ப ரென்றறிக’ என்றதும், பெரும்பான்மையும் அறிவை நோக்கியே யன்றி, உடம்பை நோக்கி யன்று. அது பற்றியே, “அறிவினில் அருளால் மன்னி அம்மையோ’ டப்ப னுகி” என்ற சிவஞான சித்தித் தொடருக்கு ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள், “உயிர்கட்

கெல்லாம் அறிவைப் பிறப்பிக்கும் அம்மை யப்பனு மாகி'' என்று உரை எழுதினர். யாதோர் உயிர்க்கும் தாய் தந்தையர் இல்லாது உடம்பு தோன்றாததுபோல, யாதோர் உயிர்க்கும் சத்தியும் சிவமும் இன்றி அறிவு தோன்றாது என்பது முடிவு. அதனால், அறிவைத் தரும் குரு இறைவனே என்று நூல்கள் கூறுகின்றன.

அன்னை தந்தையர் முதலாக மேற்கூறிய பலரையும் 'இறைவனே' என்று கூறுவதற்கும், ஞான குருவை, 'இறைவனே' என்று கூறுவதற்கும் உள்ள வேறுபாடு மிகுதி· அஃதாவது. ''இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி", ''வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி'' என்பனபோன்ற திருவாக்குகளின்படி உடலில் உயிர்போல எல்லாப் பொருளிலும் இறைவன் இரண்டறக் கலந்து அவற்றை இயக்கிவருதல் ஒரு பொது நிலை. இந்நிலையில் உயிர்கள் இறைவன் தம்முள் இருந்து இயக்குவதை அஞ்ஞானத்தால் உணர்வதில்லை. அதனால், அவை தம் செயலுக்குத் தம்மையே முதலாகக் கருதிக் கொள்கின்றன. ஆகவே, அவ்வாறு நிகழும் செயல்களெல்லாம் சிவச் செயலாவதன்றிச் சிவச்செயலாவதில்லை. ஆயினும், ஓர் உயிரால் மற்றோர் உயிர் பயன்பெறும்பொழுது பயனைத் தந்த உயிர் இறைவனை நினையாவிடினும், பயனைப் பெற்ற உயிர் அப் பயனை இறைவன் தந்ததாகக் கருத வேண்டியதே முறை. அக் காரணத்தால் மேற்கூறிய அன்னை தந்தை முதலிய அனைவரும் அவர்களால் நலம் பெறுகின்றவர்களுக்கு இறைவனே யாகின்றனர். பயனைப் பெறுகின்றவர்கள் பயனைத் தந்தவர்களை இறைவனாகக் கருதினாலும், பயனைத் தந்தவர்கள் (பெரும்பாலோர்) அவ்வாறு கருதாமையால், அங்கு இறைநிலை நிரம்புவதில்லை.

ஞான குரவர் தம்பால் நிகழும் செயல்களைப் பிறர் சிவன் செயலாகக் கருதினும் கருதாவிடினும், தாங்கள் அவை அனைத்தையும் ஞான மிகுதியால் சிவன் செயலாகவே உணர்ந்து. தம் செயலற்று நிற்பர். அதனால் அவர்களது செயல்கள் யாவும் சிவன் செயலாதலே யன்றிச் சீவச் செயலாதல் இல்லை. இதைத்தான், 'இறைவன் ஞானியரிடத்தில் தயிரில் நெய் போல விளங்கியும், ஏனையோரிடத்தில் பாலில் நெய்போல விளங்காமலும் இருக்கின்றான்' என்று கூறுகின்றார்கள். ஆகவே, 'ஞான குரு சிவனே' என்பது முற்றிலும் உண்மையாகின்றது. இதனையே,

''குருவே சிவம்எனக் கூறினன் நந்தி;
குருவே சிவமா வதுகுறித் தோரார்;
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்;
குருவே உரையுணர் வற்றதோர் கோவே''

என்று அருளிச்செய்தார் திருமூலர். ஆகவே, குரு லிங்க சங்கமம் என்ற மூன்றில் குருவினிடத்தில் செய்யும் வழிபாடு தலையாய தாகின்றது. இவ்வாய்ப்பு,, ஞான குரு கிடைத்து, அவரால் ஞானம் கைவரப் பெற்றவர்கட்கே கூடும். அது கிடையாதவர் களும் குருமூர்த்திகளாய் உள்ளவர்களை வழிபடுதல் இன்றியமையாதது.

## இலிங்கம்

'இலிங்கம்' என்பது 'குறி' அல்லது 'அடையாளம்' எனப் பொருள்படும். இது, கன்ருப்பூர் நடுதறி இலிங்கமான செயலாலும் அறியப்படும். திருக்கோயில்களில் உள்ள திருமேனிகள் பலவும் இறைவனின் குறிகளே ஆதலால், அவை அனைத்தும் இலிங்கங்களே. ஆயினும் அனைத்துத் திருமேனிகட்கும் மூலமாய் - முதற்கருவாய் உள்ளது, முகம் கை முதலிய உறுப்புக்கள் இன்றிப் பிழம்பு மாத்திரமாய்க் காணப்படும் அருவுருவத் திருமேனி இது 'ஒளிவடிவம்' என்றும் சொல்லப்படும். இச் சிறப்புப் பற்றியே 'இலிங்கம்' என்பது மூல லிங்கமாகிய பிழம்பு வடிவத்திற்கே சிறப்புப் பெயராயிற்று, இவ்விலிங்க வடிவம் உலகனைத்திற்கும் மூலமாகிய முப்பத்தாறு தத்துவங்களின் வடிவமாகவும் கொள்ளப்படுவது, அதனால், இலிங்க வழிபாடுகளில் இவ் அருவுருவத் திருமேனி வழிபாடே சிறந்தெடுத்துப் பேசப்படுகின்றது. இஃது ஆன்மார்த்தமாகவும், பரார்த்தமாகவும் செய்யத் தக்கது. ஆன்மார்த்தம், அவரவரும் தனித்தனி கொண்டு செய்யும் வழிபாடு. பரார்த்தம், ஊருக்கும் நாட்டிற்கும் பொதுவாகத் திருக்கோயில்களில் நடைபெறும் வழிபாடு. இலிங்க வழிபாட்டினை ஆன்மார்த்தமாகக் கொண்டு செய்ய இயலாவிடினும், பரார்த்தமாக உள்ள திருக்கோயிலில் சென்று வழிபடுதல் மக்கள் அனைவர்க்கும் இன்றியமையாததாகும்.

## சங்கமம்

'சங்கமம்' என்பது, 'இயங்குவது' எனப் பொருள் தரும். மேற்கூறிய இலிங்கம், இறைவனது இயங்கா வடிவம். இறைவனுடைய அடியார்கள், அவனது இயங்கும் வடிவம். ஆகவே, அவ் வடியார்களே. 'சங்கமம்' எனப்படுகின்றனர். இவர்களை, "நடமாடக் கோயில்" என்று திருமந்திரமும், "பராவு சிவர்" என்று சிவஞான சித்தியும் கூறுகின்றன. எனவே, இறைவனடியார்களையும் இறைவனாகவே கண்டு வழிபடல் வேண்டுவதாகின்றது.

குருவினிடத்தில் அவரது பெருமைகளை அறிந்து அணுக வேண்டும். அடியவரிடத்தில் அவர்கள் மேற்கொண்டுள்ள திருவேடமே முதன்மையாகக் கொள்ளத் தக்கது. அவர்களிடத்தில் உள்ள குணம் குற்றங்களை ஆராயாது, 'திருவேடமே பொருள்' எனக் கொண்டு, அவர்களைச் சிவனாகவே கருதி வழிபடல் வேண்டும். அறுபான்மும்மை நாயன்மார்களில் அடியவரை வழிபட்ட நாயன்மார் பலரது செயலில் இந்நிலையை நன்கு காணலாம்.

"எவரேனும் தாமாக இலாடத் திட்ட
திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி
உவராதே அவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறம்நினைந்தங்கு உவந்துநோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமேபேணிக்
கவராதே தொழும்அடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே"

என்பது அப்பர் திருவாக்கு. குருவழிபாடு, இலிங்க வழிபாடு செய்பவர்களும் சங்கம வழிபாடு செய்தல் இன்றியமையாதது. குரு வழிபாடு இலிங்க வழிபாடுகளைச் செய்ய இயலாவிடினும், சங்கம வழிபாட்டினைத் தவறாது செய்தல் வேண்டும் என்பதற்காகவே, திருமூலர், தமது திருமந்திரத்தில்,

"படமாடக் கோயில் பகவற்கொன் றீயின்,
நடமாடக் கோயில் நம்பற்கங் காகா ;
நடமாடக் கோயில் நம்பற்கொன் றீயின்,
படமாடக் கோயில் பகவற்க தாமே".

என்று அருளிச்செய்தார்.

"ஈசனுக்கன் பில்லார் அடியவர்க்கன் பில்லார் ;
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் ; தமக்கும் அன்பில்லார்"

என்கின்றது சிவஞான சித்தி. இவற்றா லெல்லாம் சங்கம வழிபாட்டின் சிறப்பு நன்கு விளங்கும்.

"எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்
தாம்விரும்பும்
உண்மை யாவது பூசனை"

என்று குறிக்கப்பட்ட பூசை, இவ்வாறு, 'குரு வழிபாடு, இலிங்க வழிபாடு, சங்கம வழிபாடு' என மூன்றாய் அமைகின்றது. ஆகவே, இம் மூன்றுமே சைவத்தின் முடிந்த முடிபாக உள்ளன. இதனை,

"அப்பா இம் முத்திக்கு அழியாத காரணந்தான்
செப்பாய் அருளாலே செப்பக்கேள் - ஒப்பில்
குருலிங்க வேடமெனக் கூறில்இவை கொண்டார்
கருவொன்றி நில்லார்கள் காண்"

என்றும்,

கற்று மனம்போற் கசிந்துகசிந் தேஉருகி
உற்றுசான் லிங்கம் உயர்வேடம் - பற்றுக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்திதனில் நின்றிடுவர் பார்"

என்றும் வரும் உண்மை விளக்க வெண்பாக்களால் தெளிவுற உணர்ந்து கொள்ளலாம். ஆகவே, பெறுதற்கரிய மக்கட் பிறப்பைப் பெற்றோர் பலரும், அப் பிறப்பின் பயனை அடைதற்குக் குரு லிங்க சங்கம வழிபாட்டினைக் கடைப்பிடித்தல் இன்றியமையாததாகும்.

இனி, "நடமாடக் கோயில் நம்பன்" என்ற திருமந்திரத்தின் படி, குருமூர்த்தியே சங்கமமும் "குருவே சிவம்" என்கின்ற உண்மையின்படி குருவே இலிங்கமும் ஆகின்றார். எவ்வாறெனில் 'சிவபெருமான் ஆன்மாக்கள் உய்ய எழுந்தருளியிருப்பது திருக்கோயில்களில் இலிங்க வடிவமாகவே' என்றுதான் அருள் நூல்கள் சிறப்பாகக் குறிப்பிடுகின்றன. ஆகவே, சிவமேயாய் விளங்குகின்ற குரு, இலிங்கமும் ஆகின்றார் என்பதற்குத் தடையில்லையன்றோ ! இது பற்றித்தான் சிவஞான சித்தி நூலும்,

"பரம்பிரமம் இவன்என்றும், பரசிவன்தான் என்றும்,
பரஞானம் இவன்என்றும், பராபரன்தான் என்றும்,
அரன்தரும்சீர் நிலையெல்லாம் இவனே என்றும்
அருட்குருவை வழிபட"

என்று கூறுகின்றது,

இனி, ஞான குரு பரிபூரணமாகின்ற இறைநிலையை எய்திய பின், சிவலிங்கத்தில் கலந்து நின்று வழிபடப்பெறுதலையும் இங்கு நினைவுகூர்தல் வேண்டும்.

ஞானிகள் பரிபூரணமானபின் அவர்களது திருமேனியை மற்றையோர் உடல்போல நினைத்து எரிப்படுத்தலோ, அவர்கள் பரிபூரணமான நிகழ்ச்சியை மற்றையோரது முடிவுபோல அசுபமாக நினைத்து அமங்கல ஓசை எழுப்புவதோ, ஆசௌச

மாகக் கருதுவதோ கூடாது. அவர்கள் பரிபூரணமான செயல் ஒரு சிறந்த மங்கல நிகழ்ச்சியே. ஆகையால், அவர்கள் திருமேனிக்கு மங்கல விழா எடுத்து, முறைப்படி குகையமைத்து அதனுள் எழுந்தருள்வித்து ஆலயம் அமைத்து வழிபாடுகள் நடத்துதல் வேண்டும். நல்ல நதிக்கரை, பொய்கைக் கரை, நந்தவனம் முதலிய புனித இடங்களே அக்குகை அமைத்தற் குரிய இடமாகும். இவ்வாறன்றி ஞானிகள் திருமேனியை நெருப்புத் தீண்டுமாயின், அது சிவாலயத்தை நெருப்புப் பற்றிய தற்கு ஒப்பாக, உலகத்திற்குப்பெருந்தீங்குவிளைக்கும். மேற்கூறிய வாறு அவர்கள் திருமேனி நன்முறையில் எழுந்தருள்வித்து நித்திய நைமித்திக வழிபாடுகள் செய்விக்கப் பெறுமாயின் உலகத்திற்கு நலம்பல விளையும்.

சிவ தத்துவம் ஐந்தில் நாத தத்துவத்தில் சிவமும், விந்து தத்துவத்தில் சத்தியும், சாதாக்கிய தத்துவத்தில் சதாசிவராகிய குருமூர்த்தியும் எழுந்தருளியுள்ளார்கள். அந்தச் சதாசிவ வடிவம் இலிங்க வடிவமே. அதனல். குருமூர்த்த ஆலயத்தில் இலிங்கப் பிரதிஷ்டை செய்து, அதில் பரிபூரணமான குருவை ஆவாகனம் செய்து மற்றும் சிறப்புக்களுடன் வழிபடுதல் வேண் டும். இவ்வாறு சிவாகமங்களிலும், திருமூலர் திருமந்திரத்திலும் சொல்லப்பட்டுள்ளது.

சென்ற பரிதாபி ஆண்டு ஐப்பசித் திங்களில் காசியில் சென்று பரிபூரணமான தருமையாதீனம் 25ஆவது குருமகாசந்நி தானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியினது திருமேனியை, 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இம்முறையிலே எழுந்தருள்வித்து, பின் காசி விசுவநாதர் ஆலய அமைப்பு முறைப்படியே குருமூர்த்த ஆலயம் எடுப்பித்து, இலிங்கப் பிரதிட்டை செய்வித்து, ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் முதலாண்டுக் குருபூஜை தினத்தன்று சிறப்பாக மகாகும்பாபிஷேகம் நடைபெறுவித்ததையும், அதுபொழுது குரு லிங்க சங்கமங்களின் சிறப்பை யாவரும் உணர்ந்து உய்யும் பொருட்டு அம்மூன்றையும் பற்றி மூன்று நாட்கள் மாநாடுகள் நிகழ்வித்ததையும் சைவப் பெருமக்கள் நன்கறிவர். அண்மையில் நிகழ்ந்த அந்நிகழ்ச்சிகளின் பயனை அனைவரும் மறவாது உள்ளத்துள் கொண்டு குரு லிங்க சங்கமங்களில் — சிறப்பாக குருவழிபாட்டின் உயர்வை உணர்ந்து, அவ்வழிபாட்டில் ஈடுபட்டுப் பயன்பெறுவோமாக.

---

தருமையாதீனம் 26-ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

## ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் குருமூர்த்த ஆலயக் குடமுழுக்கு விழாவில்

29—10—1972 ஞாயிறுகாலை அன்பர்களிடையே வழங்கியருளிய

# ஆசியுரை

" முன்னே உரைத்தால் முகமனேயொக்கும் இம்மூவுலகுக்கு
அன்னையும் அத்தனும் ஆவாய் அழல்வணா நீயலையோ
உன்னை நினைந்தே கழியுமென் ஆவி கழிந்ததற்பின்
என்னை மறக்கப்பெறாய் எம்பிரான் உன்னை வேண்டியதே "

— அப்பர் தேவாரம் - 4 - 1052

" முப்பொருள் உண்மை நாளும் மொழிந்தருள் மெய்கண் [டான்தன்
திப்பிய சந்தானத்துத் திருநகர்த் தருமை மேவி
இப்புவித் தொடர்பின் நீக்கி என்னையும் அடிமை கொண்ட
சுப்பிர மணிய ஞான சம்பந்தன் துணைத்தாள் போற்றி "

தருமை வளர்த்துத்தந்த தவச்செல்வங்களாகிய குன்றக்குடி மகாசந்நிதானம் அவர்களே, திருப்பனந்தாள் காசிவாசி அவர்களே, அன்பர்களே! கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களின் குருமூர்த்த ஆலயத்தை இங்கே எடுப்பித்து, அவர்கள் பரிபூரணமான முதல் ஆண்டுநிறைவு நாளாகிய இன்று, குடமுழுக்கு விழாவும், குருபூஜை விழாவும். அபிஷேகஆராதனைகளுடன் நடந்தும், நடக்கவும் இருக்கின்றன.

கயிலைக்குருமணி அவர்கள் பரிபூரணமான பத்தாம்நாள் குருபூஜை விழாவில் வெளியிடப்பெற்ற நினைவுமலரில் கயிலைக் குருமணியின் ஒருசில சிறப்பியல்புகள் மட்டுமே வெளியிடப்பட்டன. இன்று வெளிவரவிருக்கும் நினைவு மலரில் கயிலைக் குருமணி அவர்களின் ஒப்பற்ற தொண்டின் அருமை பெருமைகளை அனுபவித்த பெருமக்கள் எந்த எந்தக்கோணத்தில் கண்டிருக்கிறார்கள் என்பதனை இம்மலர் தாங்கி வருகிறது. முதல் பதிப்பைக் குன்றக்குடி மகாசந்நிதானம் அவர்கள் வெளியிட்டார்கள். இரண்டாம் பதிப்பை தருமையாதீனத்தின் தலைசிறந்த மாணாக்கராக விளங்கிய குமரகுருபரரின் வழிவந்த காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் அவர்கள் வெளியிட்டுத் தருவார்கள்.

தவச்செல்வர்கள் அருளியும், வெகுண்டும் கூறுவன உடனே பயன்தருவன. கயிலைக் குருமணியவர்கள் காசியம்பதியில் முத்திப் பேறு எய்தியபின்னர், எவ்விதப்பிணக்கும் இல்லாது இம்மடாலயம் தொடர்ந்து அமைதிப்பணி ஆற்றிவருவது ஒன்றே அவர்கள் திருவருள் உறைப்பிற்குச் சான்றாக விளங்குகின்றது. இந்த அருளாட்சியின் சிறப்புக்கு அவர்கள் இறைவன்பால் கொண்டிருந்த அழுத்தமான பக்தியே காரணம். நமது சாமர்த்தியத்தால் அல்ல. கயிலைக்குருமணி அவர்களுக்குச் சிதம்பரம் என்றால் உயிர். நடராஜப்பெருமான் திருவடிகளில் அளவற்ற ஈடுபாடு. அந்த ஈடுபாட்டின் வெளிப்பாடுதான் உரிய நேரத்தில் இங்கே நடராஜப் பெருமானின் அருட்பிரசாதம் வந்து சேர்ந்தது. 26½ ஆண்டுக்காலம் குடிகளை அவர்கள் கண்போல் ஆதரித்து அரவணைத்துக் காத்து வந்தார்கள்.

ஆதீன அன்பர் திரு. எம். ஆர். பிள்ளை அவர்கள் குமாரருக்குக் குழந்தைப்பேறு இல்லையென்று ஒருமுறை வந்து கயிலைக் குருமணியிடம் தெரிவித்துக்கொண்டார்கள். செல்வமுத்துக் குமாரப்பெருமானைத் தொடர்ந்து 5 கார்த்திகைக்குச் சென்று வழிபட உத்தரவாயிற்று. மகாசந்நிதானத்தின் அருளிப்பாடு நிறைவேறிற்று. அவர்கள் அருளிக் கூறிய அருள்விளக்கத்திற்கு இதுபோல் பல சான்றுகள் கூறலாம்.

வெகுண்டு ஒன்று கூறுவிட்டாலும், அவர்கள் திருவுள்ளம் நோக நடப்பவர்கள் தண்டனைபெற்ற நிகழ்ச்சிகளும் பல உள்ளன. ஓராண்டு கந்தசஷ்டி தரிசனத்தை முடித்துக்கொண்டு சுசீந்திரம் வழியாகக் கன்னியாகுமரி சென்று வழிபடத் திருநெல்வேலியிலிருந்தே திட்டமிட்டார்கள். சுசீந்திரத்தில் புதிதாகக் கட்டப்பட்டிருந்த தருமையாதீனக் கிளை மடத்தில் இரண்டு நாள் தங்க அனுமதி கேட்டிருந்த கிறித்துவ சமயத்தைச் சார்ந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஒருவர் பல நாள்வரைக் கிளை மடத்தைக் காலி செய்யவில்லை. கயிலைக் குருமணி அவர்கள் வருகையைக் கூறியபோது. அவர்களைப் பயணிகள் விடுதியில் (T. B.) தங்கச் சொல்லுங்கள் என்று அலுவலர்களிடம் அவர் கூறினர். இச் செய்தி கயிலைக் குருமணி அவர்களுக்கும் எட்டியது- இருந்தும் தடையின்றிக் கன்னியாகுமரி சென்று வழிபட்டு மீண்டார்கள். அவர்கள் திருவுள்ளத்தில் என்ன நினைத்தார்களோ! இது நடந்து ஒருவாரத்திற்கெல்லாம் கர்ப்பிணியாக இருந்த அப் போலீஸ் அதிகாரியின் மனைவி, கனவில் 'சாமியார் சூலத்தால் குத்த வருவதுபோல் கண்டு அஞ்சி, கருச்சிதைவேற்பட்டு இறந்துபோனாள்.

" ஈச னடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசம தாகுமே நம்நந்தி ஆணையே "
—திருமந்திரம் (534)

என்ற திருமூலர் வாக்கிற்கு அவர்கள் ஆற்றல் விளக்கமாகவே அமைந்தது.

" ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் "

என்ற திருமந்திர வாசகத்தை நேற்றுச் சிந்திக்கையில் கயிலைக் குருமணி அவர்களோடு இணைத்துக்காணும் திருவருள் எண்ணம் உண்டாயிற்று. ஒன்று என்பது சிவத்தைக் குறித்தது, இரண்டாவது பெருமானின் அருளைவிளக்கிற்று. அருளது சக்தியாகும் அரன் தனக்கு, என்பது சாத்திரவாக்கு. மூன்றினுள் நின்றனன் என்பதில், இறைவன் மூன்றுவதாகிய சங்கம வடிவங்களில் தோன்றி நின்று அருளுவன் என்பது விளங்குகின்றது.

அத்தொடரைப் பிறிதோர் வகையில் பொருள் காண்கையில் மூன்றினுள் நின்றனன் என்பதற்கு இறைவன் குரு, லிங்க, சங்கமம் என்ற மூன்று பிரிவில் தோன்றி நிற்பான் என்றும் பொருள் காணலாம்.

கயிலைக் குருமணி அவர்கள் முதலில் இங்கே அடியாராக (சங்கமர்) விளங்கி, ஞானபீடம் ஏற்றபின் குருவாக அருள் விளக்கஞ்செய்து, முத்திப்பேறு எய்திய நிலையில் இன்று இங்கே சிவலிங்கத் திருமேனியில் விளக்க முற்றுத் திகழ்கின்றார்கள். நின்றனன் மூன்றனுள் என்ற திருமந்திரத் தொடர் கயிலைக் குருமணி அவர்களுக்குப் பொருந்தி வரும் இயைபு திருவருளால் நம் சிந்தனையில் உதித்தது. அதனால்தான் அவர்கள் நினைவைக் குரு, லிங்க, சங்கமத் திருநாளாகக் கொண்டாடுகின்றோம்.

இங்கே அவர்கள் காசியில் முத்திப்பேறு எய்தியதன் நினைவாகக் காசி ஸ்ரீ விசுவநாதர் ஆலய அமைப்பில் ஆலயம் எடுக்க எண்ணி ஸ்தபதியைப் பணித்தோம், அவரும் குருமூர்த்த ஆலயத்தை எழுப்பியபின் 21 கலசங்கள் வேண்டுமென்றார். 21 கலசங்கள் வாங்கப்பெற்றன. வேலை முடியும் தறுவாயில் எண்ணிப்பார்த்தால் 25 கலசங்கள் தேவைப்படுவது தெரிய வந்தது. 25 ஆவது குருமணியாக விளங்கிய அவர்கள் ஆலயத்தில் நாம் எண்ணிச் செய்யாமலேயே 25 கலசங்கள் அமைந்ததை அவர்கள் திருவருள் விளக்கத்திற்கு உரிய சான்றாகக் கூறலாம்.

# திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

## மூலமும் – உரையும்

உரையாசிரியர் :-

பண்டித வித்துவான், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்
**திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை**

( மலர் 11. இதழ் 12. பக்கம் 629 இன் தொடர்ச்சி )

**பொருளேதிரு வையாற்றெழில் பொலியும் புனிதாநின்**
**அருளேபெறும் அடியாருன தடியைத் தொழுதேத்தும்**
**தெருளேது மிலானென்றுரை செப்பாவகை யுள்ளத்**
**திருளேகடிந் தளிதந்திடல் என்றோ அருள்குன்றே. (52)**

( சொ - ள் ) பொருளே - மெய்ப்பொருளாகியுள்ளவரே, அருள் குன்றே - கருணை மலைவடிவானவரே, திரு ஐயாற்று எழில்பொலியும் புனிதா - திருவையாற்றில் எழுந்தருளிய தூய்மை யானவரே, (எழில்பொலியும்) அழகுடன் விளங்கும் ஐயரே, நின் அருள் ஏ பெறும் அடியார் - தேவரீருடைய திருவருளினைமுற்றப் பெற்ற அடியவர்கள், இச்சிறியவன், உனது திருவடியைத் தொழுது ஏத்தும் தெருள் ஏதும் இல்லான் என்று உரை செப்பா வகை - தேவரீருடைய திருவடிகளை வணங்கித் துதிக்கும் தெளிவு சிறிதும் இல்லாதவன் என்று கூறுவகை; உள்ளத்து இருளே கடிந்து - மனத்தின்கண் அறியாமையாகிய இருளைப் போக்கி, அளிதந்திடல் என்று ஓ - கருணையளித்தருளல் எந்நாளோ (அருள்புரிக விரைந்து) என்பதாம்.

( கு - ரை ) பொருள் - மெய்ம்மை சேர்ந்தபுகழ்

" இருள்சேர் இருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு "

என்ற திருக்குறட்பாவில் பொருள் எனற்குப் பரிமேலழகர் மெய்ம்மை சேர்ந்தபுகழ் என்றார் எழில் - எழுச்சி ஈண்டுமுற்றும் வனப்புடைத்தாயிருப்பது. சமுதாய சேவை எனப்படுவது. பொலிதல் - விளங்கல். தெருள் - தெளிவு, உரைசெப்பாவகை - பிறர் கூறியமையாதபடி, செப்பல் - செப்பு என்பன ஒரு பொருள் நன்றாக மொழிவது. உள்ளத்திருள் - மனவிருள், ( அறியாமை அவிச்சையென்பனவாம்) கடிதல் - மேலும் மேலும் எழாவகை நீக்கல். என்று ஓ என்பதில் ஓகாரம் வினைப்பொருட்டு, அருள்

குன்று - உருவகம், வள்ளுவர் கடவுள் வாழ்த்தில் இறைவன் நிறைமலரடியை ஏழு குறட்பாக்களில் எடுத்துக்கூறிச் சிந்தித்தலும் வாழ்த்தலும் வணங்கலும் பற்றிக் கூறுகின்றார். வாலறிவன் நற்றாள், மாணடி, இலானடி, உவமை இல்லாதான்தாள், எண்குணத்தான்தாள், அந்தணன்றாள், இறைவனடி என இயம்பலை யாய்தல் வேண்டும். இறைவன் திருவடியே வீடாயிருக்குமென்றலை வற்புறுத்துவதால், அடியார் உனதடியைத் தொழுது ஏத்தும் என்று புகழப்பெற்றதாம்.

**குன்றுச்செழுஞ் சுடராகிய கோவேதவ முனிவோர்க்(கு)**
**அன்றாலில மர்ந்தேமகிழ்ந் தறமாதி யுணர்த்தும்**
**உன்றாள்தமி யேனுந்தொழு(து) உய்வானருள் புரிவாய்**
**மின்றாழ்சடை யாவைந்நதி விமலாதனி வடிவே. (53)**

(சொ - ள்) குன்று(த) செழும் சுடர் ஆகிய கோ ஏ, - குறைவு இல்லாத (நிறைவுற்ற) நல்ல ஒளி உருவாகிய இறைவரே ! மின்தாழ் சடையாய் - மின்னல் போலும் ஒளிவிடும், தாழ்ந்த (நீண்ட) கவர்த்தமெனும் செஞ்சடையுடையவரே, ஐந்நதி விமலா - திருவையாற்றில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள தூய்மையானவரே, தனிவடிவே - ஒப்பற்ற திருவுருவுடையவரே, தவ(ம்) முனிவோர்க்கு அன்று ஆலில் (ஏ)-சனகர் சனந்தனர் சனாதனர் சனற்குமாரர் ஆகிய பெருந் தவமுடைய (நான்முகன் மக்களாகிய) நால்வருக்கும் அக் காலத்தில் கல்லால நிழலின் கீழிருந்து, ஆறம் ஆதி உணர்த்தும் - அறமுதனாற் பொருள்களையும் கூருமற்கூறியறிவுறுத்தியருளும், உன்தாள் - தேவரீருடைய திருவடிகளை, தமியேனும் தொழுது உய்வான் அருள் புரிவாய் - அடியவனும் வணங்கிக் கடைத் தேறுமாறு திருவருள் புரிந்தருள்வீராக - (எ - று)

(கு - ரை) குன்றுத - என்பது ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம் குன்று எனவாயிற்று. செழுமைசுடர் - செழுஞ்சுடர் என்பது பண்புத்தொகை. கோ - தலைவர், தவம் - விரதமுடைய நோன்பாம். அன்று - அக்காலத்தில் ஆல் - கல்லாலமரம். அமர்தல் - குருவடிவாய் எழுந்தருளல், அறம்ஆதி - அறனும் பொருளும் இன்பும் வீடும் ஆம். உறுதிப்பொருள் என்பர் முதன் மூன்றன் உவர்ப்பே - வீடாகும்.

" ஈதலறம் தீவினைவிட் டீட்டல் பொருள் எஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித் - தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு "

என்பது, மூதாட்டியார்வாக்கு.

"செஞ்சடைக்கற்றை முற்றத்திளநிலா வெறிக்குஞ்சென்னி" என்பது திருமறை. 'மின்ருழ்சடையானை' என்பது மினருழ் சடையென வொற்றியதாம். தனிமை - ஓர்தன்மை, விமலா - அழுக்கற்றவரே! தமியேனும் என்பதில் உம்மை இறந்தது தழீஇயது. பெரியோர்களாகிய தொண்டர்கள் உய்வு பெற்றது போல எளியேனும் எனவாதலால் என்க.

**வடியார்துள வணிமால்கிடி வடிவாயய னனமாய்ப்**
**படிகீறியும் உயர்வானிடைப் பறந்துமறி யாநின்**
**அடிநாயினுங் கடையேற்கெளி(து) ஆகத்தரு மிறையே**
**கடியார்பொழில் சூழைந்நதிக் கருணாகர வமுதே"**

(இ - ள்) இறையே - எல்லாவுயிர்களிடத்துஞ் சென்று தங்கும் தலைவரே, கடிஆர் பொழில்சூழ் ஐந்நதி கருணாகரனே - நறுமணங்கமழும் தேன்மலர் நிறைந்த சோலைகள் சுற்றிலுமுள்ள (வளமிகு) திருவையாற்றில் எழுந்தருளிய கருணைக்கு உறையு ளாகியவரே. அமுதே - தேவர்கட்கருளும் திவ்விய அமிழ்தமய மானவரே, வடி ஆர் துளவு அணிமால் கிடி வடிவு ஆய் - அழகிய அரிய திருத்துழாய் மாலையினைத் தரித்தருளிய திருமா லானவர் பன்றியின் உருவு எடுத்து, படி கீறியும் - பூமியினைக் கீண்டும் (தானுவாகிய தம்பத்தினை யடிகாண்பான்) அயன் அனம் ஆய் உயர்வான் இடை பறந்தும் - நான்முகனாகிய பிரம தேவன் அன்னப்பறவை வடிவு எடுத்து உயர்ந்த விண்ணுல கத்துப் பறந்தும், (முடிதேடி அறியாத) அறியா(த) நின் - அளந் தறிய ஒண்ணாத தேவரீருடைய, அடி - திருவடிப் பேருகிய முத்தியினை, நாயினும் கடையேற்கு எளிது ஆகதரும் - நாயினுங் கடைப்பட்ட எளியேற்கு எளிமையுடைத்தாகத் தந்தருளுவார்.

(கு - ரை) துளவு, துழாய், துளசி என்பன பரியாயப் பெயர்கள். கிடி - பன்றி. அனம் இடைக்குறை. படி - பூமி. கீறல் - அகழ்தல். நின்அடி - தேவரீர் 'திருமாலும் பன்றியாச் சென்றுணராத் திருவடி' என்பது திருவாசகம்.

> "மேலுற நிமிர்ந்தும் மிகக் கீழுற வகழ்ந்தும்
> மாலும் இருவர்க்குமறியார் ஒருவர் வந்தார்"

சேக்கிழார் திருவாக்கு. அயனர் முடியப் பெருமை குறிக்கப்பட் டிலது. முடிதேடியுய்யவில்லை. அடி தேடியுய்ந்தனர். இது கருதிப் போலும், நின்னடியெனப்பட்டது. கடி - (உரிச்சொல்) விளக்கம்; மணமுமாம். கருணாகரர் - அருளுக்குறை யுளாவுள் ளார். கீறல் எளிதன்று. பறத்தல் - எளிது. என்பது புலப் பட வைத்தமை குறித்துணரற்பாலது. ஆர்தல் - நிறைதல். உயர்வான் - வினைத்தொகை. கடையேன் - கடைப்பட்டவன். தாழ்மையானவன். "அடியார்க்கெளியன்" என்பதனைப் புலப் படுத்த கடையேற்கு எளிது ஆகத்தரும் இறையே என்ருர். ஆர்தல் - நிறைதல்.

# “ கொழிதமிழ்க் கூடலில் ›

# › கொன்றை வேணியான் ”

**வித்துவான். திருமதி. ப. நீலா**

( மலர் 31. இதழ் 11. பக்கம் 650 இன் தொடர்ச்சி )

## 55. சங்கத்தார் கலகம் தீர்த்தது.

காமனைப் பொடியாக்கிய கண்ணுதற் பெருமான் கீரனுக்கு இலக்கணம் உபதேசித்தமையைக் கண்டோமல்லவா? அந்தப் பெருமானே சங்கத்தாரின் கலக்கம் தெளிய ஊமையொருவனைக் கொண்டு பாடலுணர்த்திய தன்மையை இனிக்காண்போம்.

அந்தமில் கேள்விஞானம் படைத்த நாற்பத்தெட்டு புலவர்களும் பலவேறு பாடல்களை யாத்துவைத்துக்கொண்டு தம்மைத் தாமே மதித்துப் பெருமை கூறிக்கொண்டு ஆலவாய்ப் பெருமானின் திருமுன்பு கூடினர். ஈறிலாத எழில் வடிவனை வணங்கி ‘அடிகளே யாங்கள் தொடுத்த இப்பாடல்களுள் விழுமியதும் தீயதும் இவையென வேறுபாடு அளந்துகாட்டி - எங்கள் ஐயம் போக்கி அருள்க’ என்று வேண்டி நின்றனர். இருவர் தேட அகப்படாத இறைவன் உலகுக்கெலாம் கருவென முளைத்த மூலலிங்கத்துணின்றும் கண்ணிற்குத் தெரியாப் புலவனாகி நின்று ஒன்றையருளினான்.

இம்மாநகரில் தனபதி யென்றொரு வணிகனும் அவன் மனைவி குணசாலினியும் வாழ்கின்றார்கள். அவர்கள் செய்த மாதவப் பயனால் பொய்யறிவாளரைக் கடியும் பகலவன்போல் ஒரு புதல்வன் தோன்றியுள்ளான். மன்மதனுக்கிணையான எழிலுடை யம்மகன் ஊமை. அவனிடம் சென்று நீங்கள் செய்யுட்களை யெல்லாம் கூறினால் தக்க விடை பெறலாம் என்று கூறினான் பெருமான்.

உடனே புலவர்கள் ‘ஐயனே மணிவாணிகனின் மகன் ஊமையென்றால் நன்றான தீதான பாடல்களை அவன் எப்படி அறிவிப்பான்’ என்று ஐயம் எழுப்பவும் இறைவன் கூறினான், “புலவர்களே! நீங்கள் சொல்லும் பாடல் சொல்லாழமும்

பொருளாழமும் உடையதாயிருந்தால் ஊமை மைந்தன் தன் முடிதுளக்கிக் கல்லார் புயம் புளகித்து நிற்பான். இதுகொண்டு திறம்மிக்க பாடலை அறியலாம்" என்று பெருமான் புலவர்களின் ஐயம் போக்கித் தெளிவுறுத்தினன்.

பின் பாவலரெல்லாம் தனவணிகன் வீடுசென்று அவர்கள் குலமணியை நன்பால் மலரும் சாந்துங்கொண்டு போற்றித் தம் குழாத்துள் இருத்தித் தம்தம் பாடல்களை மொழிந்தனர். மகிழ்ந்தான் சிலர் சொல்லாழங்கண்டு. சிலர் பாடலில் இருந்த பொருள் நலங்கண்டு பூரித்தான். சிலர் பாடலை இகழ்ந்தான். சிலருடைய பாடலின் சொற்பொருள் இன்பமுணர்ந்தான்.

மகிழ்ந்தான்சிலர் சொல்லாழ்ச்சியை
மகிழ்ந்தான் சிலர் பொருளை
இகழ்ந்தான் சிலர் சொல்வைப்பினை
இகழ்ந்தான் சிலர் பொருளைப்
புகழ்ந்தான் சிலர் சொல்லின்பமும்
பொருளின்பமு மொருங்கே
திகழ்ந்தான் சிலர் சொற்றிண்மையும்
பொருட்டிண்மையும் தேர்ந்தே.


இத்தன்மையனாகிக் கலைநூல் வல்லோர்தம் தமிழெல்லாம் தன் சித்தத்தினில் தேர்ந்து சொல்லும் சிறுவன் நக்கீரன், கபிலன், பரணன் இவர்களின் பாடலை உள்ளமுவப்பக் கேட்டுக் கரசிர மசைத்துக் களிப்பைக் காட்டினன். சொல்தோறும் பொருள் தோறும் நுழைந்து புலனைந்தும் பனிக்கக் குழைந்து நின்றான். நடுவு நிற்கும் துலைக்கோல்போல – இப்படி இவன் தீர்ப்புச் சொல்ல, புலவர்களும் தம்முள் தாங்கொண்ட பகைமை ஒழிந்து கீரனை, கபிலனை, பரணனைத் துதித்துக் கொண்டாடினர்கள். பரஞ்சோதியார் கூறினர், வணிகக்குல குமரனல்லவா. அவன்; காசும், பவளமும், முத்தும் நிறுக்கும் குலத்துதித்த அவன் தன் குலவியல்புக்கேற்ப - துலைநா நடுங்காமல் தீர்ப்பளித்தான் என்றார்.

பல்காசொடு கடலிற்படு பவளஞ்சுடர் தரளம்
எல்லாநிறுத் தளப்பானென வியல்வாணிகக் குமரன்
சொல்லாழமும் பொருளாழமுந் துலைநாவெனத் தூக்க
நல்லாறறி புலவோர்களு நட்டாரிகல் விட்டார்,


நக்கீரர், கபிலர், பரணர் மூவரையும் பாராட்டிக் கொண்டு தெய்வப் புலவர்கள் குற்றமற்ற நூல்களை ஆராய்வதில் காலம் போக்கிக் கொண்டு சிறந்து விளங்கினர்கள்.

(வளரும்)

திருப்பெண்ணாகடம்
ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனார் குருபூஜை விழா வழிபாட்டில்
தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் ஆசி வழங்குதல்




தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி வெள்ளி விழாவில் (24—10—72)



தவத்திரு குன்றக்குடி அடிகளார், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள்,
தமிழக ஆளுநர் ஆகியோர் முன்னிலையில்
தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் வாழ்த்துரை வழங்குதல்

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி வெள்ளி விழாவில் (24—10—72)



தமிழ்நாடு ஆளுநர்
மேதகு. கே. கே. ஷா அவர்கள் தொடக்க உரை யாற்றுதல்



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்
தமிழ்நாடு முதலமைச்சர்
டாக்டர். கலைஞர். மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்கட்கு
பொன்னாடை போர்த்தி ஆசி வழங்குதல்

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி வெள்ளி விழாவில்:



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்
தமிழக ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்களுக்கு
பொன்னாடை போர்த்தி ஆசி வழங்குதல்



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்
தமிழ்நாடு அரசு அறநிலைய அமைச்சர்
மாண்புமிகு. கண்ணப்பன் அவர்களுக்குப்



தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானமும்
திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான்
சுவாமிகளும்
யாகசா ழிபாடு செய்தல்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி குருமூர்த்தக் கோயிலில்
புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்பெற்ற
சிவலிங்கத் திருவுருவிற்கு
தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
கும்பாபிஷேகம் செய்தல்

# திருமந்திரம் - மூலமும் உரையும்

திருக்குறள்வேள்
திரு. ஜி. வரதராஜப் பிள்ளை B. A.,

(மலர் 31. இதழ் 11. பக்கம் 637 இன் தொடர்ச்சி)

270. அன்பு சிவம்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார் - அனுபவமில்லாதவர் அன்பாகிய சத்தியும் சிவமாகிய அறிவும் இரண்டுபொருள் என்பர். அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார் - அன்பின் முதிர்வினுல் சிவமாகிய அறிவு விளங்கும் என்பதை உயர்ந்தோர் தாழ்ந்தோராகிய எல்லோரும் உணர்வதில்லை. அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின் - அன்புதான் சிவத்தை விளங்கும்படி செய்கிறது என்பதை எல்லோரும் உணர்ந்தபின். அன்பே சிவமாய் அமர்ந்து இருந்தாரே - அன்பே வடிவாய் சிவமாந் தன்மை எய்தியிருந்தார்.

அன்பே சிவம் - அன்பின் முதிர்வே சிவம். "ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே என் அன்பே" என்ற மாணிக்கவாசகர் வாக்கை ஒப்பிட்டுக்கொள்க. அன்பு என்ற பண்பைக் காணமுடியாது; உணர முடியும். அதைப்போன்று சிவத்தைத் காணமுடியாது, உணரமுடியும் என்ற உண்மையும் உணர்க.

அன்பே சிவத்தை விளங்கச் செய்யும்.

271. பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்
பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே.

பொன்னைக் கடந்து இலங்கும் புலித்தோலினன் - பொன்னிலும் பிரகாசமுடைய புலித்தோலைப் போன்ற மஞ்சள் ஒளியில் விளங்குபவன். மின்னிக்கிடந்து மிளிரும் இளம்பிறை - பளிச் சென்று பிரகாசிக்கும் சிற்றொளியையுடைய பிறை. துன்னிக் கிடந்த சுடுபொடி ஆடிக்கு - பொருந்தியிருந்த வெண்ணீற்று ஒளியில் விளங்கும் கூத்தனுக்கு. பின்னிக்கிடந்தது என் பேரன்புதானே - என்னுடைய பேரன்பு கலந்திருந்தது.

புலித்தோல், பொன்னைக் காட்டிலும் கப்பு மஞ்சள் நிறமுடையது. புலித்தோலினன் - மஞ்சள் ஒளியில் விளங்குபவன். சுடுபொடியாடி - வெண்ணீற்றொளியில் ஆடுபவன். துறவிக்கு மஞ்சள் ஒளியும், இல்லறத்தார்க்கு வெண்மை ஒளியும் சிரசின் மேல் சாதகம்செய்யும் போது விளங்கும் என்பர். கூத்தன் பொன்னம்பலத்திலும், வெள்ளியம்பலம் பலத்திலும் ஆடுகின்றான் என்பது இக்கருத்துப் பற்றியதேயாம். தூலத்தில் பொன்னம்பலம் சிதம்பரமும், வெள்ளியம்பலம் மதுரையும் ஆகும்.

275. என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்போன் மணியினை எய்தவொண் ணாதே.

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டு - எலும்பையே விறகாகக் கொண்டு உடம்பின் தசையை அறுத்து. பொன் போல் கனலில் பொரிய வறுப்பினும் - நெருப்பிலிட்டுப் பொன்னைப் போலக் காய்ச்சி வறுத்தாலும். அன்போடு உருகி அகம் குழை வார்க்குஅன்றி — அன்போடு உருகி மனம் நெகிழ்வார்க்கு அல்லாது. என்போல் மணியினை எய்த ஒண்ணாதே - என்னைப் போல இறைவனை அடைய முடியாது.

உடலை வருத்திச்செய்யும் வழிபாடு அசுர வழிபாடு. மனத்தால் நெகிழ்ந்து உருகும் வழிபாடு அன்பு வழிபாடு.

அன்போடு உருகிச்செய்யும் வழிபாடு சிறந்தது.

273. ஆர்வம் உடையவர் காண்பர் அரன்தன்னை
ஈரம் உடையவர் காண்பார் இணையடி
பாரம் உடையவர் காண்பார் பவந்தன்னைக்
கோர நெறிகொடு கொங்குபுக் காரே.

ஆர்வம் உடையவர் காண்பர் அரன்தன்னை - மிக்க அன்புடையவர் இறைவனை உணர்வர். ஈரம் உடையவர் காண்பார் இணையடி - அன்பினால் உண்டாகும் மனம் நெகிழ்வுடையவர் விந்து நாதமாகிய திருவடிகளைச் சிரசில் சூடுவர். பாரம் உடையவர் காண்பார் பவந்தன்னை - சம்சாரமாகிய சுமையைத் தாங்கி வருந்துபவர் பிறவியாகிய சாகரத்தில் உழல்வர். கோர நெறிகொடு கொங்குபுக்காரே - அன்பில்லாத அவர் துன்பமாகிய காட்டகத்தே நெறி அறியாது திண்டாடுவர்.

ஈரம் - ஆர்வத்தால் உண்டாகும் நெகிழ்வு. கோரம்-துன்பம். கொங்கு - காடு.

அன்பில்லாதவர் இறைவனை அடைய வழி அறியாது வருந்துவர்.

274. என்னன் புருக்கி இறைவனை ஏத்துமின்
முன்னன் புருக்கி முதல்வனை நாடுமின்
பின்னன் புருக்கிப் பெருந்தகை நந்தியுந்
தன்னன் பெனக்கே தலைநின்ற வாறே.

என் - பல பேசிப் பயன் என்ன ? அன்புருக்கி இறைவனை ஏத்துமின் - அன்பினால் மனத்தை உருக்கி இறைவனை ஏத்தி வழிபடுங்கள். முன் அன்புருக்கி முதல்வனை நாடுமின் - தலையாய அன்பினால் மனத்தை உருக்கித் தலைவனை நாடுங்கள். பின் அன்புருக்கிப் பெருந்தகை நந்தியும் - அவ்வாறு நாடிய எனக்குப் பெருமையுடைய குருநாதனும் பாசத்தைப் போக்கி - தன் அன்பு எனக்கே தலைநின்றவாறே - தனது கருணையை என்னிடத்துக் காட்டும் வகை இவ்வாறும்.

என் - விளி. முன் அன்பு - தலையாய அன்பு. பின் அன்பு - பாசம். தன் அன்பு - தனது கருணை.

அன்போடு ஏத்தினால் இறைவன் வெளிப்படுவான்.

[ தொடரும் ]

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின்

# முதலாண்டுக் குருபூசை விழா
# குருமூர்த்த ஆலய மகாகும்பாபிஷேக விழா

**கயிலைக் குருமணி :**

தருமையாதீன வரலாற்றின் பொற்காலம் எனப் பலரும் போற்ற அருளரசோச்சியவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள். இவர்கள் இளமையில் சமய நூற் கேள்விகளில் வல்லவர்களாய் முறையாகத் திருமுறை பயின்று ஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் அவர்களிடம் குருகுல வாசமாயிருந்து சிறந்த மெய் நூற்பொருள்களை அறிந்தும் சூரியனூர் கோயில் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களிடம் சைவ சித்தாந்த சாத்திர நூல்களைக் கற்றும் தருமையாதீனம் 24 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களிடம் துறவு மேற்கொண்டவர்கள். ஆதீன மரபின்படி சமய விசேஷ நிர்வாண தீட்சைகளும் பெற்று ஸ்ரீ சொக்கநாத ரைப் பூசிக்கும் பேற்றையும் 8 ஆண்டுகளில் பெற்று ஒடுக்கம் ஸ்ரீ சிவகுருநாதத் தம்பிரான் சுவாமிகள் என்ற திருப்பெயரோடு விளங்கினார்கள். அடியவராயிருந்த காலத்தில் திருவிளையாடற் புராணம், பெரிய புராணம், கந்தபுராணம், திருவாசகம். திருக்கோவையார் முதலிய சமய இலக்கிய நூல்களை நாடோறும் புலவர் திரு. மீ. சுந்தரம்பிள்ளை அவர்களை ஓதச்செய்து கேட்டும், ஆதீன நிர்வாகங்கள், "ஞானசம்பந்தம்" இதழாசிரியர் பணி, ஆதீன தேவஸ்தானத் திருவிழா நிகழ்ச்சிகள் முதலியவற்றைக் கண்காணிக்கும் பொறுப்புக்களை ஏற்றுத் திறம் பெற அனைத் தையும் நடத்தியும் வந்தார்கள், சமயப் பிரசாரப் பணிகளில் பங்கு கொண்டும், புகழ்பெற்ற மெய்கண்டான் சித்தாந்த மாநாட் டினை நிகழ்த்தியும் செயலாற்றும் திறமைகளில் சிறந்து விளங்கி னார்கள். 24 ஆவது குருமகா சந்நிதானம் அவர்கள் அரு ளாட்சிக்குப் பின் ஆட்சிபீடம் ஏறி 26½ ஆண்டுகளில் இவர்கள் செய்த சமயப் பணிகளும், சமுதாயப் பணிகளும், கல்விப் பணி களும் மிகப் பலவாகும்.

பல்வகையாலும் பெருமையோடு திகழ்ந்த ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் மகாகயிலாய தரிசனம் முடித்துத் தருமை திரும்பிய நாள்முதல் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளிய நொடித்தான்மலைத் திருப்பதிகத்தில் மிக்க ஈடுபாடு உடைய

வர்களாய், அதனையே பல்காலும் ஓதியும், ஓதச்செய்தும் மகிழ்வார்கள். அவர்கள் திருவுள்ளத்தில் இறைவன் தம்மை ஏற்றுக்கொள்ள அழைப்பு விடுக்கவேண்டும் என்று கருதிய குறிப்பு இருந்ததுபோலும்! இறைவன் இவ்வேண்டுகோளை உடனே ஏற்கவில்லை. அப்பரடிகளை மீளவும் தமிழகம் வாழ உலகில் விளங்கச்செய்ததுபோலக் கயிலைக் குருமணியவர் களையும் மேலும் பல ஆண்டுகள் சமயநெறி தழைக்க உலகில் வாழச் செய்தருளினன்.

சென்ற ஆண்டில் கந்த சஷ்டிக்குக் கயிலையனைய செந்திற் பதிக்குச் சென்ற ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் காசிக்குச் செல்லவேண்டுமென்று மிகவிரைந்து பயணம் மேற்கொண்டார்கள். முத்தி க்ஷேத்திரமாகிய காசியில் பரிபூரணம் எய்தினர்கள். அவர்களின் திருமேனி வான ஊர்தி வழியாகக் கொண்டுவரப் பெற்றுத் தருமையில் ஆனந்தபரவசர்பூங்காவில் குருமூர்த்தமாக அமைக்கப்பெற்றது.

## குருமூர்த்த ஆலயம் :

தருமையாதீனத்தின் 26 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி அருளாட்சி ஏற்றுள்ள ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நிறைந்த கல்வியறிவும், நூற்கேள்விகளும் வாய்க்கப்பெற்றவர்கள். சிறந்த தெய்வத் திருப்பணிகளைச் செய்து சிவபுண்ணியம் ஈட்டியவர்கள். உலகிய லறிவும், உயர்குணங்களும், ஒழுக்கசீலமும், குருபக்தியும் உடைய வர்களாய்த் தமிழ்நாட்டின் தலைநகரிலிருந்து தமிழகம் முழுதும், இலங்கையிலும் சென்று சமயப் பிரசாரப் பணிகள் செய்தும் சிவம் பெருக்கிய செம்மலாய் விளங்கியவர்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் நினைவுகளை நிறைவேற்றியருளும் திருவுளம் வாய்க்கப்பெற்றவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களிடம் இவர்கள் கொண்டிருக்கும் பக்திக்கு எடுத்துக்காட்டாகக் குரு மூர்த்த ஆலயம் எழுந்து விளங்குகிறது. இருபத்தைந்தாவது குருமணியாக விளங்கியதற்கேற்பத் தாமே இருபத்தைந்து கலசங்களோடு, காசியில் பரிபூர்ணம் எய்தியதற்கேற்பக் காசி விசுவேசர் ஆலய விமான அமைப்புக்களோடு, குருமூர்த்த ஆல யத்தை மிகச் சீரியமுறையில் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம் ஆகியவற்றோடு திருப்பணிகள் செய்வித்தார்கள். 26 ஆவது குருமணி அவர்களின் திருவுளம்போல விளங்கி எழுந்து காட்சி யளிக்கிறது இவ்வாலயம். வண்ணச் சுதைச் சிற்பங்களோடு கண்ணைக்கவரும் இவ்வாலயத்தை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் நாடோறும் சென்று குருமூர்த்த தரிசனம் செய்யும்போ

தெல்லாம் சிற்பிகளுக்கு ஆலோசனைகளைக் கூறிச் சிறந்ததொரு ஆலயமாக இதனை எடுப்பித்துள்ளார்கள்.

## குருபூசை விழாத் திட்டம் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் முக்திப்பேறு எய்திய முதலாண்டு நிறைவின் குருபூசை விழா 29—10—72 ஞாயிறு அன்று வருகிறது என்பதைத் திருவுளங்கொண்ட ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அதனை மிகச் சிறந்த முறையில் நிகழ்த்தவும் அன்றே அவர்கட்கு எடுப்பித்த ஆலயத்தின் மகா கும்பாபிஷேக விழாவை நடத்தவும் திருவுளம் பற்றினார்கள். திட்டங்கள் வகுக்கப் பெற்றன. 27—10—72 முதல் மூன்று நாட்கள் குரு லிங்க சங்கம மாநாடு நடத்துவதென்றும் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு யாக சாலைகள் வழிபாடுகள் செய்விப்பதென்றும் திட்டங்கள் வகுக்கப்பெற்று நிகழ்ச்சிகளும் கும்பாபிஷேகப் பத்திரிகைகளும் அச்சிடப் பெற்று அன்பர்களுக்கு அனுப்பப்பெற்றன.

## யாகசாலை :

ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் இஷ்ட தெய்வமாக விளங்கும் அம்பிகை. அவ்வம்பிகை திருக்கோயிலில் அமைக்கப்பெற்ற அழகிய யாக சாலையில் 27—10—72 காலை 10 மணி அளவில் கடம் எழுந்தருளுவிக்கப்பெற்று யாகசாலை வழிபாடு தொடங்கப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளியிருந்து சிறப்புற இவ்விழாவைத் தொடங்குவித்தார்கள். வேதசிவாகமபாராயணங்கள், திருமுறைப்பாராயணங்கள் முறையாக நிகழ்ந்தன. ஆதீன வேத சிவாகம பாடசாலைத் தலைமையாசிரியர் சிவஸ்ரீ சுவாமிநாத சிவாசாரியார் பூசைகளைக் கண்காணித்து நிகழ்த்தினார்கள். ஆதீன தேவஸ்தானங்களின் ஓதுவாமூர்த்திகள் பலரும் திருமுறைப் பாராயணங்களைச் செய்தனர். பன்னிரு திருமுறைப் பாராயணங்கள் மூன்று நாட்களிலும் நிகழ்ந்து முற்றுவிக்கப் பெற்றது.

## குரு லிங்க சங்கம மாநாடு :

தருமையாதீனம் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் மூன்று நாட்களும் குரு லிங்க சங்கம மாநாடு நிகழ்ந்தது. 27-10-72 வெள்ளி மாலை 6 மணிக்குத் தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் வாழ்த்துரையோடு

மாநாடு தொடங்கியது. முதல் நாள் சங்கமத் திருநாள். மாயூரம் டாக்டர் திரு. M. சுவாமிநாதன், M. B., B. S. அவர்கள் சிறப்புரை வழங்கினர்கள். வேளூர்க் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் "குமரகுருபரர்" பற்றியும் திருச்சிராப்பள்ளி திருக்குறள்வேள் திரு. G. வரதராசப்பிள்ளை அவர்கள் அடியார் பெருமை பற்றியும், அண்ணமலைப் பல்கலைக் கழகத் தமிழாரய்ச்சித்துறைத் துணைப்பேராசிரியர் திரு. க. வெள்ளை வாரணனர் அவர்கள் நாயன்மார்களில் சங்கம வழிபாட்டால் பயனுற்றோர் பற்றியும், சென்னை வித்துவான். ப. வடிவேல் பிள்ளை அவர்கள் கயிலைக் குருமணி பற்றியும் சொற்பொழி வாற்றினர்கள். இரவு சிறுத்தொண்டர் வரலாறு பற்றிக் கணநாதர் பொம்மை நாடகக் குழுவினரின் பொம்மலாட்டம் நடைபெற்றது.

இரண்டாம்நாள் இலிங்கத் திருநாள், திருப்பனந்தாள் காசி மடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் சிறப்புரையோடு மாநாடு தொடங்கியது. சிதம்பரம் அறப்பணிச்செல்வர் திரு. கே. அரங்கசாமிப்பிள்ளை, M B., B. S. அவர்கள் சொக்கநாதர் பற்றியும், தருமையாதீனப் புலவர் திரு. சி. அருணைவடிவேல்முதலியார்அவர்கள் நாயன்மார் களின் இலிங்க வழிபாட்டால் பயனுற்றோர் பற்றியும் உரையாற் றினர். மகாவித்துவான் திரு ச. தண்டபாணிதேசிகர் அவர்கள் நன்றியுரை கூறினர்.

மூன்றும்நாள் குருமணித் திருநாள், குன்றக்குடி திருவண்ணமலை ஆதீனம் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வ சிகாமணி அருணசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தலைமையில் மாநாடு தொடங்கியது. சென்னை சமயப் பிரசார நிலையம் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வெள்ளியம்பல வாணர் பற்றிச் சொற்பொழிவாற்றினர்கள். தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையில் அருள் பெறுதற்குச் சிறந்தது என்ற தலைப்பில் பட்டிமண்டபம் தொடங்கியது. குருவழிபாடே என்ற கட்சியில் மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் வித்துவான், திரு. இரா. செல்வக்கணபதி, வித்துவான். திரு. சொர்ணகாளீஸ்வரன் ஆகியோர் பேசினர். இலிங்க வழிபாடே என்ற கட்சியில் வித்துவான். திரு. வே. இரத்தின சபாபதி, M. A., திரு. அறிவொளி, M. A., திரு. வேம்பன், M. A., ஆகியோர் பேசினர். சங்கம வழிபாடே என்ற கட்சியில் வித்துவான் திரு. கு. சுந்தரமூர்த்தி M. A., திரு. அகோரம் M. A., வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் ஆகியோர் பேசினர்.

**மகாகும்பாபிஷேகம் :**

29—10—72 ஞாயிறு காலை 7-15 மணிக்கு குருமூர்த்த ஆலய மகாகும்பாபிஷேகம். ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் ஸ்ரீ சொக்கநாதர் வழிபாடுகளை முடித்து காலை 6-30 மணிக்கு யாகசாலைக்கு எழுந்தருளினார்கள். பூர்ணாகுதிகள் சிறப்பாக நடை பெற்று நிறைவுற்றன. 7-மணிக்குக் கடம் புறப்பாடாகி வீதிவல மாகக் குருமூர்த்த ஆலயத்திற்கு எழுந்தருளச்செய்யப்பெற்றது.

குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களும், பனசை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களும், திருவாவடுதுறை ஆதீனச் சார்பில் மாயூரம் கட்டளை விசாரணை சுவாமிகளும் மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அன்பர்கள் பலரும் வந்திருந்தனர். கொட்டும் மழை குடமுழுக்கு விழாவின் சிறப்புகளைக் காணத் தன்னை மறந்து நின்றது. சரியாக 7-15 மணியளவில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மங்கல வாத்தி யங்கள் வேதசிவாகம பாராயணங்கள் திருமுறை முழக்கங் களுடன் அன்பர்களின் அரகர ஒலியுடன் விமான மகா கும்பாபி ஷேகத்தைச் செய்தருளினார்கள். உடன் கருவறையில் சிவலிங்கத் திருமேனிக்கு கட அபிஷேகம் நடைபெற்றது. விசேஷ வழிபாடு கள் நிகழ்ந்தன. அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கப் பெற்றன.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அன்பர்களுக்கு வாழ்த் துரை கூறி ஆசீர்வதித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் நினைவஞ்சலியாக வெளியிடப்பெற்ற நினைவு மலரை திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் வெளி யிட்டருளினார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கும்பாபி ஷேக விழாவைச் சிறப்புறச் செய்து திருமடத்திற்கு மேளவாத்தி யங்களோடு எழுந்தருளினார்கள். 9 மணி முதல் தருமபுரம் திரு. பி. சுவாமிநாதன், சீர்காழி திரு. எஸ் திருஞானசம்பந்தம் குழுவினரின் திருமுறை இன்னிசையரங்கு நிகழ்ந்தது.

காலை 11 மணிக்கு மகாபிஷேகமும், நண்பகல் 1 மணி அளவில் மாகேஸ்வரபூசையும் நடைபெற்றது. இரவு 8 மணிக்கு குருமூர்த்த ஆலயத்திற்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி ஆராதனைகள் செய்து வழிபாடுகள் நிகழ்த்தி பிரசாதம் வழங்கி அன்பர்களுக்கு வாழ்த்துரை அருளினார்கள்.

தமிழ்நாடு தெய்வீகப் பேரவையின் சார்பில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் குருபூசை விழா நினைவு மலராக வெளி

யிடப்பெற்ற திருஞான சம்பந்தர் வரலாற்றுச் சித்திர ஆங்கிலத் தமிழ் விளக்க நூலை பேரவைத் தலைவர் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் முன்னிலையில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வெளியிட்டருளினர்கள். தருமையாதீனம் 26வது மகாசந்நிதானம் அவர்களுக்குக் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வாழ்த்துப் பாமாலை அணிவித்துப் பொன்னுடை போர்த்தி மாலை சூட்டிச் சிறப்பித்தார்கள்.

இரவு 10 மணி அளவில் சென்னை திரு. கே. சி. தியாகராாசன் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி என்னும் தலைப்பில் இன்னிசைக் கதை நிகழ்த்தினர்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பட்டாடை அணிவித்து வாழ்த்தினர்கள். இவ்வாறு எல்லா வகையாலும் கும்பாபிஷேக விழாவும் குருபூசை விழாவும் சிறந்து நிகழ்ந்து இனிது நிறைவுற்றது.

---

## பார்வையாளர் குறிப்பு

தருமபுரம் ஆதீனம்

### ஸ்ரீ கம்பகரேஸ்வரசுவாமி தேவஸ்தானம், திருபுவனம்.

பழமையான சரித்திரச் சிறப்பு, அபூர்வமான மூர்த்திச் சிறப்பு, அற்புதமான சிற்பச் சிறப்பு, தருமை ஆதீனத்தின் தூய்மையான நிர்வாகச் சிறப்பு ஆகிய பல சிறப்புக்களும் ஒருங்கே இணைந்த இந்தக் கோயிலுக்கு இன்று குடும்பத்துடன் வந்து தரிசனம் செய்து ஆனந்தம் அடைந்தேன்.

கோயிலை நிர்வாகம் செய்கிற அனைவரையும் மிகமிகப் பாராட்டி மகிழ்கிறேன்.

(ஒ-ம்.) மீ. ப. சோமசுந்தரம்,

16—10—72. (வானொலி நிலையம், சென்னை.)

திருப்பெண்ணாகடம்

## ஸ்ரீ மெய்கண்டார் ஆலயத்தில்

5—11—72 ல் நடைபெற்ற

ஸ்ரீ மெய்கண்டார் குருபூஜை விழாவிற்கு எழுந்தருளிய

தருமையாதீனம் 26ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியருளிய

# ஆசியுரை

மெய்யன்பர்களே !

சைவ சந்தானுசாரியர் நால்வருள் முதல்வராகிய ஸ்ரீ மெய்கண்ட தேவர் திருவவதாரம் செய்தருளிய இத்திருத்தலத்தில் (பெண்ணாகடத்தில்) அவர்தம் தந்தையார் பெயரால் 'களப்பாளர் மேடு' என்று இன்றும் வழங்கி வருகின்ற இந்த இடத்தில் அவ்வாசாரியருக்கு அமைந்துள்ள இக்கோயில் மிகவும் சிறந்ததாகும். இதனை அமைக்க முதலில் முயன்றவர் இவ்வூரிலே தோன்றிய வழக்கறிஞர் திரு. அரங்கசாமிப் பிள்ளையவர்கள். அவரும், இன்னும் சில அன்பர்களும் மெய்கண்ட சந்தானத்தில் விளங்கும் திருவாவடுதுறை ஆதீன மகாசந்நிதானத்தில் தெரிவிக்க, ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அவ்வாதீனத்திறகே இந்த இடத்தை விலைக்கு வாங்கினுர்கள். பின்பு வயலூர் அன்பர் ஒருவர் கோயில் திருப்பணியைத் தொடங்கிக் கட்டி முடித்தார். கும்பாபிஷேகம் நிகழ்ந்தபின், நாள் வழிபாடு, மெய்கண்டாரது திருநட்சத்திரமாகியசுவாதிச் சிறப்பு வழிபாடு முதலியவைகளை இவ்வூரிலும், சுற்று வட்டாரத்திலும் உள்ள சைவப் பெருமக்கள் நடத்தி வருதல் மிகவும் பாராட்டத்தக்கது. இவர்கள் அனைவர்க்கும் மெய்கண்டாரது அருளாசி எல்லா நலங்களையும் அருளுவதாக.

சென்ற ஆண்டில் மாதந்தோறும் வருகின்ற சுவாதியில் சிவஞானப் போதச் சொற்பொழிவு நடைபெறவேண்டும் என்று கருதிய அன்பர்களது விருப்பத்தாலும், முயற்சியாலும், முன்பு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தத்துவப் பேராசிரியராய் இருந்து, இப்பொழுது பூம்புகார்க் கல்லூரியில் அப்பணியை மேற்கொண்டுள்ள திரு. இரத்தின சபாபதி அவர்களைக்கொண்டு

'மாதம் ஒரு சூத்திரம்' என்ற முறையில் 12 சூத்திரங்களும் நடத்துவிக்கப்பெற்றன. இன்று அவர் அச்சொற்பொழிவை நிறைவு செய்துள்ளார்.

சூரியனது சத்தியும், சந்திரனது சத்தியும் பயிரை வளர்ப்பதுபோல, இறைவனது சத்தி உயிர்களை வளர்க்கின்றது. அந்தச் சத்தி நம்ஆசாரியர்கள் மூலமாகவே நம்மை ஆட்கொள்ளுகின்றது. அது எதுபோல எனின், இன்று நமது குடியரசுத்தலைவர் நம்மையெல்லாம் ஆள்கின்றார் என்றால், அவர் நேரே நம்மிடம் வந்து நமக்கு வேண்டுவனவற்றைச் செய்வதில்லை. எத்தனையோ அதிகாரிகள் மூலமாக இந்நாட்டில் உள்ளோர் அனைவர்க்கும் அவரவர்களுக்கு வேண்டியவற்றைச் செய்து வருகின்றார். அதுபோலவேதான் இறைவனும் இத்தகைய ஆசாரியர்கள் மூலமாக நமக்கு வேண்டியவற்றை அருள்கின்றான். இதனையறிந்து நாம் நமது ஆசாரியப் பெருமக்களை வழிபட்டுப் பயன்பெற வேண்டும். அவர்கள் அருளிச்செய்த நூல்களையும் தக்கவர்கள் வாயிலாகக் கேட்டு உணரவேண்டும்.

சித்தாந்த சாத்திரங்களுள் தலைமணியாக விளங்குவது ஸ்ரீ மெய்கண்டார் அருளிச் செய்த சிவஞானபோதமே. சித்தாந்த உண்மைகள் பழமையானவையே என்றாலும், அதனைத் தெளிவாக எடுத்து விளக்கியவர் மெய்கண்ட தேவரே. சைவ சித்தாந்தம் முப்பொருளை அடிப்படையாகக் கொண்டது. முப்பொருள், 'பதி, பசு, பாசம்' என்பன. பதி பேரறிவுப் பொருள்; பிறர் அறிவிக்க வேண்டாது, எல்லாவற்றையும் தானே அறியவும், உயிர்கட்கு அறிவிக்கவும் வல்லது. 'பசுக்கள்' எனப்படும் உயிர்கள், அறிவித்தால் அறியும் தன்மையுடையன, தாவரம் முதல் தேவர் ஈறாக உள்ள எல்லா உயிர்களும் ஒருவர் அறிவித்தாலன்றித் தாமே அறியும் தன்மையுடையன அல்ல. உலகம் – அஃதாவது பஞ்ச பூதம், அவற்றிற்கு மேல் உள்ள தத்துவங்கள் அனைத்தும் சடம் – அறிவே இல்லாதது; அறிவித்தாலும் அறியமாட்டாதது. அதனால், அவைகளை இறைவன் உயிர்கட்குக் கருவியாகத் தந்துள்ளான். 'தத்துவம்' என்றால் 'கருவி' என்பது தான் பொருள். உயிர்கள் இக்கருவிகளைக் கொண்டு அறிவைப் பெருக்கி, முடிவில் இறைவனை அடைந்து இன்புறும். இதுபற்றிய விரிவான விளக்கங்கள் அனைத்தையும் மெய்கண்டார் 12 சூத்திரங்களில் நாற்பதே வரியில் அடக்கிக் கூறியுள்ளார். இதுபோன்ற நூல் வேறு எந்த மொழியிலும் இல்லை. இத்தகைய அருஞ்செயல் ஸ்ரீ மெய்கண்ட தேவருக்கு திருக்கயிலையில் விளங்கும் சிவபெருமான் நந்தி தேவருக்குச் செய்த உபதேசத்தினை வழி வழியாகப் பெற்ற அருளால்

வாய்த்தது. அவர் வழியாகவே இன்று, 18 என்று எண்ணிக்கை சொல்லப்பெறுகின்ற சைவ ஆதீனங்கள் தோன்றின. சைவ ஆதீனங்களின் ஞானத்தந்தை ஸ்ரீமெய்கண்டாரானமைபற்றியே, அவை 'திருக்கயிலாய பரம்பரை, நந்தி மரபு, மெய்கண்ட சந்தானம்' என்று குறிப்பிடப் பெறுகின்றன. மெய்கண்டாரது சித்தாந்தம் இன்றுள்ள விஞ்ஞானிகளாலும் ஒப்புக்கொள்ளப்பெறுகின்றது.

திரு. இரத்தினசபாபதியவர்கள் ஓராண்டுக் காலமாகச் சிவஞான போதச் சொற்பொழிவை இவ்வூரிலும், மற்றும் சுற்று வட்டாரத்திலும் உள்ள அன்பர்கள் கேட்டுப் பயன் அடையும் வண்ணம் முறையாக ஆற்றிவந்துள்ளார். இதனை அவர் பிரதி பயன்கருதிச் செய்யவில்லை. சிறந்த தொண்டு மனப்பான்மையிலே தான் எத்தனையோ தடைகள் இருப்பினும், அவற்றையெல்லாம் கடந்துவந்து செய்திருக்கின்றார். அவருக்கு நாம் இப்பொழுது ஸ்ரீ மெய்கண்டாரது ஆசிக் கவசமாகப் பொன்னாடை போர்த்த இருக்கின்றோம். பிரதி பயன் கருதாதவர்களுக்குத் தான் பொன்னாடை போர்த்திச் சிறப்பிப்பது என்று பெரியோர்கள் கொண்டிருந்தார்கள். பொன்னால் மற்றவர்கள் பலனடைகிறார்களே தவிர, பொன் மற்றவர்களால் பயனடைவதில்லை. அதனால்தான் பொன்னாடை இத்தகைய தொண்டுள்ளம் படைத்தவர்களுக்கு உரியதாகின்றது.

சிவஞான போதச்சொற்பொழிவைத் தொடர்ந்து செய்து வந்து, இன்றுகாலை நிறைவு செய்த இவர், இப்பொழுதும் 'முன்னேற்றத்துக்குரிய வழிகள்' என்ற பொருள்பற்றி ஒரு சொற்பொழிவு செய்ய இருக்கின்றார். மெய்கண்டாரது குருபூஜைச் சிறப்பாகிய இவ்விழாவில் நம் ஆதீனப் புலவர் மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார், 'உலகம் ஏன்' என்ற பொருள் பற்றியும், மகாவித்துவான் திரு ச. தண்டபாணி தேசிகர் அவர்கள், 'முன்னேறியபின்' என்ற பொருள் பற்றியும் சொற்பொழிவாற்ற இருக்கின்றார்கள். இவையெல்லாம், நீங்கள் ஓராண்டுக் காலமாகக் கேட்டுவந்த சிவஞான போதத்தை மீண்டும் சிந்திப்பதற்குத் துணைசெய்யும். இனியும் நீங்கள் இதுபோன்ற நூல்களைத் தொடர்ந்து கேட்டுப் பயன் பெறல் வேண்டும்.

ஸ்ரீ மெய்கண்டாரது குருபூஜைத் திருநாளில் அவரது வழிபாட்டிலும், சொற்பொழிவிலும் ஈடுபட்டும், மற்றும் பல வகையில் பங்கு பற்றியும் மகிழ்கின்ற அன்பர்கள் அனைவர்க்கும் ஸ்ரீ மெய்கண்டாரது அருளாசி எல்லா நலங்களையும் வழங்குவதாக. வாழ்க வையகம்! வளர்க சிவநெறி!

# தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி

# வெள்ளிவிழா

## தருமையும் தமிழும் :

முடியுடை மூவேந்தர் ஆட்சிக்குப் பின் செந்தமிழ் மொழியைச் சிறப்புற வளர்த்த பெருமை திருமடங்களுக்கு உரியது. தருமையாதீனம் நானூறு ஆண்டுகளாக அன்னைத் தமிழுக்கு அரண்போலமைந்து விளங்கிவருகிறது. ஸ்ரீ குருஞானசம்பந்தரின் கரங்களில் கண்ணுக்கு இனிய பொருளாய் எழுந்தருளிய ஆலவாயிறைவன் சங்கத்தமிழின் தலைமைப் புலவராக விளங்கிய பெருமானல்லவா? தமிழறியும் பெருமானாக விளங்கும் செந்தமிழ்ச் சொக்கன் எழுந்தருளியுள்ள தருமைத் திருமடம் தமிழ் மணங் கமழும் இடமாக விளங்கி வருகின்றது. ஸ்ரீ குருஞான சம்பந்தர் முதல் அவர்கள் வழியில் வரும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள் இயற்றியுள்ள அருள்நூல்களும், ஆதீனத்துத் திருக்கூட்டத்து அடியவர்களாக விளங்கிய குமரகுருபரர், வெள்ளியம்பலவாண முனிவர், சம்பந்தசரணாலயர், தமிழாகரர், படிக்காசு முனிவர் முதலியவர்களும் இயற்றியுள்ள தமிழ் நூல்களும் பண்டாரசாத்திர, தோத்திரங்களாகவும், இலக்கிய இலக்கணங்களாகவும் விளங்குகின்றன. புலவர்களுக்குப் புக்கிலாகவும் அருந்தமிழ் நூற்சுவடிகளின் சேமிப்புக் களஞ்சியமாகவும் விளங்கி எண்ணற்ற நூல்களை வெளியிட்டுச் செந்மிழ்த் தொண்டினைச் சிறப்புறச் செய்துவரும் இத் தருமையாதீனத்தின் 25 ஆவது குருமகாசந்நிதானமாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களால் வியஆண்டு ஆடித்திங்கள் 18 ஆம் நாள் (2—8—1946) அன்று தொடங்கப்பெற்றது தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.

## கல்லூரியின் பணி :

இருபத்தைந்தாண்டுகளில் -460 புலவர்களை உருவாக்கித் தமிழுலகெங்கணும் பணி செய்யும்படி உதவிய இப் பல்கலைக் கல்லூரி தமிழ்நாட்டின் மொழிக் கல்லூரிகளில் சிறந்து விளங்குவது. பல்கலைக் கழகப் பாடப் பகுதிகளில் சிறந்த பயிற்சியும்' சிறப்பாகச் சமயநூற் பயிற்சிகளையும் அளித்து மாணவர்களின் ஒழுக்கம் பண்பாடுகளைக் கண்காணித்து உருவாக்கும் பணியைச் செய்துவருவது. திருமடத்தினைச் சார்ந்திருப்பதால் ஆதீனத்திற்கு வரும் பல பெரியோர்களின் அறிவுரைகளைக் கேட்கும்

வாய்ப்பை மாணவர்கள் பெறுகின்றனர். ஆதீனத் திருமடத்தில் நிகழும் பல்வேறு சமய இலக்கிய மாநாடுகளில் ஈடுபட்டு அரிய நூற் கருத்துக்களைக் கேட்டும் நலம் பெறுகின்றனர்.

தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள், குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் ஆகியோர் இக் கல்லூரியில் பயின்றவர்கள். சட்டமன்றங்களில், கல்லூரிகளில், உயர்பள்ளிகளில் சமயச் சொற்பொழிவு மேடைகளில் இன்று புகழ்பெற்று விளங்குவோர் பலர் இக் கல்லூரியில் பயின்ற பழைய மாணவர்கள்.

## வெள்ளிவிழா :

இப் பல்கலைக் கல்லூரியின் வெள்ளிவிழா சென்றயாண்டில் நிகழ்த்தவேண்டும் என்று திட்டமிடப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் சிறந்த முறையில் தமிழ் விழாவாகக் கல்லூரியின் வெள்ளிவிழாவை நிகழ்த்தவேண்டும் என்றும். தமிழ்நாட்டின் ஆளுநர் அவர்களையும் முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்களையும் கொண்டு விழாவை நடத்தவேண்டு மென்றும்திருவுளம்பற்றினர்கள். விழா முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்றன. விழாமலர் அச்சிடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கல்லூரியில் பயின்ற பழைய மாணவர்கள் பலரும் கூடி தாங்கள் பயின்ற கல்லூரியின் வெள்ளிவிழா சிறப்புற நிகழத் துணை செய்யும் வகையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களைத் தலைவராகக் கொண்ட விழாக்குழு ஒன்றை உருவாக்கிச் செயல் முறைகளைத் திட்டமிட்டனர். சிறந்த முறையில் இவ்விழாவை நிகழ்த்தவேண்டும் என்ற காரணத்தால் விழாநாள் தள்ளி வைக்கப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் பரி பூரணமடைந்தபின் அருளாட்சிமேற்கொண்ட 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர் கள் திருவுளம்பற்றியவாறே வெள்ளிவிழாவை நிகழ்த்தவேண் டும் என்று கட்டளையிட்டார்கள். ஆளுநர் அவர்கட்கும் முத லமைச்சர் அவர்கட்கும் ஏற்ற நாளைக் கேட்டு வெள்ளிவிழா உறுதி செய்யப்பெற்றது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் முன்னிருந்து விழா நாட்களைக் குறித்தும் செயல் முறைகளை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுடன் கலந்து உரையாடித் திட்டங்கள் வகுத்தும் உதவினர்கள். வெள்ளிவிழா 24, 25—10—72 எனத் தீர்மானிக்கப்பெற்றது.

## முன்னேற்பாடுகள் :

தருமையாதீனத்தின் வீதிகள் விழாக்கோலம் பூண்டன. தோரணங்களாலும் மின்விளக்குகளாலும் வளைவுத்தட்டிகளாலும் வீதிகள் அலங்கரிக்கப்பெற்றன. பல்கலைக்கல்லூரி மாணவர்கள் பல்வகைக் குழுக்களாகப் பிரிக்கப்பெற்று தங்கட்குரிய பணிகளை மேற்கொண்டனர். ஒப்பனைகள், கலைக்கூடம், வரவேற்பு முதலிய பணிகளை மாணவர்கள் செம்மையாகச் செய்தனர். பல்கலைக் கல்லூரி வண்ணக்காகிதங்களாலும் தோரணங் களாலும் விளக்குகளாலும் அலங்கரிக்கப்பெற்றது. திருநெறிய தெய்வத் தமிழ்மன்றம் திருக்குறள் அட்டைகள் கட்டப்பெற்றும் வண்ணக் காகித ஒப்பனைகள் செய்யப்பெற்றும் அழகுறுத்தப் பெற்றது. கல்லூரிப் பேராசிரியர் வித்துவான். சிரோமணி, திரு. வி. சபேசன் அவர்கள் வரவேற்பு ஏற்பாடுகளைக் கண்கா ணித்தார்.

## கலைக்கூடம் :

பல்கலைக் கல்லூரி மாணவர்கள் பல மாதங்களாகச் சேகரித்த கைவண்ணப் பொருள்களும், ஓவியங்களும் சிற்பங் களும் சித்திரங்களும் கலைக்கூடத்தை அழகு செய்தன. பல்கலைக் கல்லூரிப் பேராசிரியை வித்துவான் திருமதி. ப நீலா அவர்கள் கலைக்கூடப்பொறுப்பை ஏற்றுக் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் அழகு செய்தார்கள். கல்வெட்டு எழுத்துக்கள் செப்பேடுகள் விக்கிரகங்கள் விளக்கக் குறிப்புக்களுடன் வைக்கப் பெற்றன. திருப்பனந்தாள் வித்துவான் திரு. வே. மகாதேவன் அவர்களும், ஆதீன உயர்பள்ளி ஓவிய ஆசிரியர் திரு. கே. ஜி. மூர்த்தி அவர்களும் கல்லூரி மாணவர்களோடு இணைந்து கலைக் கூடத்தைச் சிறப்புறச் செய்வித்தனர்.

## விழாமலர் :

சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலவும் அடங்கிய வெள்ளி விழாமலர்ப் பொறுப்பைப் பேராசிரியர் வித்துவான். திரு. இரா. செல்வக்கணபதி அவர்கள் ஏற்றுச் சிறந்த முறையில் மலரை உருவாக்கினர். குடந்தை ஜெமினி அச்சகத்தினர் விழாமலர் நன்குமலர அச்சிடும் பொறுப்பை ஏற்றுச் சிறப்புறச் செய்து உதவினர். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள் தமிழகத்தின் பெரும் பொறுப்பில் உள்ள ஆளுநர், முதலமைச்சர், உயர்நீதி மன்ற நீதிபதிகள், பேராசிரியர்கள் வழங்கிய வாழ்த்துரைகள் கல்லூரியின் வரலாறு அறிஞர்கள் எழுதி உதவிய சிறந்த ஆராய்ச்சிக்கட்டுரைகள் முதலியவை மலரில்இடம்பெற்றுள்ளன.

**தொடக்க விழா :**

24—10—72 செவ்வாய் மாலை 7-மணி அளவில் தமிழ்நாடு ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்துப் பேருரை வழங்க ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது, ஆளுநர் அவர்கள் மாலை 7-மணிக்குத் தருமைக்கு வருகை தந்தார்கள். ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்கா தேவி திருக்கோயிலில் பூர்ணகும்பமரியாதைகளுடன் வரவேற்கப் பெற்றார்கள். மேள வாத்தியங்களுடன் ஸ்ரீ மகாலக்ஷ்மி திருக்கோயில் சென்று வழி பாடாற்றித் திருமடத்திற்குச் சென்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆளுநர் அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்து உரையாடி னார்கள். திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்திற்கு ஆளுநர் அவர்களுடன் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி னார்கள். கடவுள் வாழ்த்தாகத் திருமுறை ஓதப்பெற்றது. கல்லூரி மாணவிகள் இறைவணக்கமாகத் திருமுறை ஓதியபின் தருமை யாதீனம் வேளூர்க் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை கூறி விழாத் தலைமை ஏற்ற திருப்பனந்தாள் காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கு வரவேற்பிதழைப் படித்தார்கள். கல்லூரிப் பொறுப்பு முதல்வர் வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் ஆளுநர் அவர்களுக்கு அளிக்கப்பெற்ற வரவேற்பிதழைப் படித்தார். மாலைகள் அணிவிக்கப்பெற்று வெள்ளிப் பேழைகளில் வரவேற் பிதழ்கள் அளிக்கப்பெற்றன.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வாழ்த்துரை வழங்கியருளினார்கள். திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தியருளினார்கள். மேதகு ஆளுநர் அவர்கள் விழாச் சிறப்புரை நிகழ்த்தி வெள்ளி விழாவைத் தொடங்கிவைத்தார்கள். பல்கலைக் கல்லூரியின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் நன்றியுரை கூறினார்கள். இரவு 10 மணிக்கு ‘ இன்று போய் நாளைவா ’ என்னும் நாடகம் பல்கலைக் கல்லூரி மாணவர் களால் சிறப்புற நிகழ்த்தப்பெற்று முதல்நாள் நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெற்றன.

**இரண்டாம் நாள் :**

25—10—72 புதன் காலை 9 மணி அளவில் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்களைச் சிறந்தமுறையில் வரவேற்க முன்னேற்பாடுகளைக் கண்காணித்துவந்தார்கள். திருநெறிய தெய்வத் தமிழ் மன்றம் அன்பர்கள் பலரின்வருகையால் நிறைந்துதிகழ்ந்தது. பன்னெடு நாட்களாக ஆவலோடு எதிர்பார்த்த கலைஞர் அவர்களை அன்பு ததும்ப வரவேற்கப் பல்கலைக் கல்லூரி மாணவர்கள் அணி வகுத்து நின்றனர். புல்கலைக் கல்லூரி வாயிலில் அமைச்சர் அவர்களை வரவேற்க அன்பர்கள் காத்திருந்தனர்.

காலை 10 மணி: தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்களும், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் அவர்களும் பல்கலைக் கல்லூரிக் கட்டிடத்தின் வாயிலுக்கு வந்து சேர்ந்தார்கள். சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சியாளர் மற்றும் பல அதிகாரிகள் அனைவரும் உடன் வந்தனர். சென்னை சமயப்பிரசார நிலையம் வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் மாலைகள் அணிவித்து மேளவாத்திய இன்னிசை களோடு அமைச்சர் பெருமக்களை வரவேற்றார்கள். பல்கலைக் கல்லூரி மாணவர்கள் அமைத்திருந்த கலைக்கூடத்தை முதலமைச்சர் அவர்கள் பாவை விளக்கை ஏற்றித் தொடங்கி வைத்தார்கள். மாணவர்களின் கலையார்வத்தையும் கலைப் பொருள்களின் சிறப்பையும் கண்டுகளித்தார். பின்னர் ஆதீனத் திருமடத்துக்கு அழைத்துச் செல்லப்பெற்றார். ஆதீனத் திருமடத்தின் நூலகம் சொக்கநாதர் பூஜைமடம் முதலிய இடங்களைப் பார்த்துக்கொண்டு திருமடத்தில் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளியிருக்கும் பண்டாரக் கட்டிற்குச் சென்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்து அருளாசி பெற்றார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் முதலமைச்சர் அவர்கட்கும், அறநிலைய அமைச்சர் அவர்கட்கும் பொன்னாடைகள் அணிவித்து வாழ்த்தினார்கள். சிறிது நேரம் உரையாடியபின் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர் களும் முதலமைச்சர் அவர்களும் அறநிலைய அமைச்சர் அவர் களும் விழா மேடைக்கு வருகைதந்து அமர்ந்தனர்.

திருமுறை ஓதப்பெற்றது. கல்லூரி மாணவிகள் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடினர். பல்கலைக் கல்லூரியில் பயின்ற ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களுள் ஒருவராகிய வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அனைவரையும் வர வேற்று முதலமைச்சர் அவர்களுக்கு அளிக்கப்பெறும் வரவேற் புரையைப் படித்து மாலை அணிவித்து வெள்ளிப் பேழையில்

வைத்து முதலமைச்சரிடம் வழங்கினார்கள். கல்லூரிப் பொறுப்பு முதல்வர் திரு. வி. சா. குருசாமி தேசிகர் அறநிலைய அமைச்சர் அவர்களுக்கு அளிக்கப்பெறும் வரவேற்புரையைப் படித்து மாலை அணிவித்து வெள்ளிப் பேழையில் வைத்து அமைச்சர் அவர்களுக்கு வழங்கினார்கள். கல்லூரிப் பேராசிரியர் திரு. இரா. செல்வக்கணபதி அவர்கள் விழாத்தலைமை ஏற்ற தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களுக்கு அளிக்கப்பெறும் வரவேற்புரையைப் படித்து மாலைசூட்டி வெள்ளிப் பேழையில் வைத்து வழங்கினர். முதலமைச்சர் அவர்கட்குச் சிறப்பாக பழைய மாணவர்கள் வழங்கிய பாமாலையை வேளூர் தேவஸ்தான திருமுறை ஓதுவாமூர்த்தி திரு. சொக்கலிங்கம் இசையோடு பாடினர். தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கட்கும், கலைஞர் அவர்கட்கும், அறநிலைய அமைச்சர் அவர்கட்கும் பொன்னாடைகள் அணிவித்தார்கள். கலைஞர் அவர்களுக்குப் பாமாலையை வழங்கி மாலை அணிவித்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் முதலமைச்சர், அறநிலைய அமைச்சர்களைப்பாராட்டி வாழ்த்துரை வழங்கியருளினார்கள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார்கள்.

வெள்ளிவிழா மலரை வெளியிட்டுத் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விழாப்பேருரை வழங்கினார்கள். தருமையாதீனம் 26 ஆவது மகாசந்நிதானம் அவர்கள் வெள்ளிவிழா நினைவாகக் கல்லூரி வளர்ச்சிக்கு ரூ. 25000 நிலைநிதி நிறுவியருளியுள்ள செய்தியை முதலமைச்சர் அவர்கள் மகிழ்வோடு தெரிவித்தார்கள். தருமையாதீனப் பணிகளைப் போற்றியும், மாணவர்களின் அடக்கம் அன்பு முதலிய பண்புகளைப் பாராட்டியும் அறிவுரை கூறியும் சிறந்ததொரு பேருரை வழங்கினார்கள்.

அறநிலைய அமைச்சர் மாண்புமிகு, திரு. மு. கண்ணப்பன் அவர்கள் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியின் பழைய மாணவர்கள் தாங்கள் கற்ற கல்லூரி நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கிய ரூ. 500 மதிப்புள்ள நூல்களைக் கல்லூரி முதல்வரிடம் வழங்கிச் சிறப்புரை யாற்றினார்கள்.

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் நிறுவியருளிய வெள்ளிவிழா நினைவு அறக்கட்டளையி லிருந்து நீதிநெறிவிளக்கக் கட்டுரைப் போட்டிப் பரிசுகளை மாணவர்களுக்கு அறநிலைய அமைச்சர் அவர்கள் வழங்கி வாழ்த்தினார்கள்.

நாட்டு வாழ்த்துடன் காலை நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன.

மாலை 7 மணி: மும்முனைப் பட்டிமண்டபம், வள்ளுவர், வாழ்க்கைக்குப் பெரிதும் இன்றியமையாததென வற்புறுத்துவது அன்பா? அறிவா? ஆற்றலா? என்ற தலைப்பில் பட்டிமண்டபம் தொடங்கியது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் பட்டிமண்டபத் தின் நடுவராக வீற்றிருந்து மிகச்சிறப்பாக விவாதங்களை ஆய்வுரை செய்தருளினார்கள்.

அன்பே என்ற கட்சியைச் சார்ந்து புலவர் திரு. கீரன். புலவர் திரு. இல. செ. கந்தசாமி M. A., புலவர் திருமதி. ப. நீலா ஆகியோரும்,

அறிவே என்ற கட்சியைச் சார்ந்து புலவர் திரு. இரா. இராமாநுசம் எம். ஏ., புலவர் திரு. சி. சம்புலிங்கம், புலவர் திருமதி. துரை. வள்ளி ஆகியோரும்,

ஆற்றலே என்ற கட்சியைச் சார்ந்து புலவர் திரு பழநி. அரங்கசாமி எம். ஏ., புலவர் திரு, இராமபத்திரன் பி. ஏ., புலவர் திருமதி. செல்லப்பாப்பா கீரன் ஆகியோரும் வாதிட்டனர்.

பட்டிமன்றத்தில் பங்கேற்ற நடுவர் உள்ளிட்ட அனைவரும் ஆதீனப் பல்கலைக் கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் என்பது சிறப்பாகக் குறிக்கத்தக்கதாகும்.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியைப் போற்றிப் புரந்து ரூ. 25000 நிலைநிதி அமைத்து வெள்ளிவிழாவைச் சிறந்த முறை யில் நிகழ்த்திடத் திருவருள்பாலித்த தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவடிகளுக்குப் பழைய மாணவர் கள் அன்புடன் அணிவித்த பாமாலையைப் புலவர் திரு. அரங்க சாமி படித்து வெள்ளிப் பேழையில் வைத்து ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தின் திருவடிகளை வணங்கிச் சேர்ப்பித்தார்.

கல்லூரிப் பொறுப்பு முதல்வர் திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் நன்றியுரை கூறினர்கள்.

விழா நிகழ்ச்சிகளை திருச்சி அனைத்திந்திய வானொலி நிலையத்தினர் ஒலிப்பதிவு செய்து வெளியிட்டனர். சென்னை திரைப் படச் செய்தித்துறையினர் படக்காட்சிகள் எடுத்து உதவினர்.

இரவு 9 மணிக்கு சேரன் செங்குட்டுவன் என்ற வரலாற்று நாடகம் கல்லூரி மாணவர்களால் நிகழ்த்தப்பெற்றது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும் நாடகக் காட்சிகளைக் கண்டு களித்தார்கள்.

கல்லூரி பழைய மாணவர் புலவர் திரு. மதிவாணன் அவர்கள் நாடக அரங்குகளைப் பொலிவுற அமைத்து உதவினர். மாயூரம் அ. வ. அ. கல்லூரி மாணவர்களின் இசைக்குழுவினர் நாடகத்திற்குப் பின்னணி இசை அமைத்துச் சிறப்பித்தனர். திரளான முன்னாள் மாணவர்களும், பெற்றோர்களும் விழாவில் பங்கேற்றிச் சிறப்பித்தனர்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மாணவர்களைப் பாராட்டி வழங்கிய நாடகப் பரிசுகளை குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வழங்கியருளினர்கள்.

---

## குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும். ஸ்ரீ காசிமடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச் செய்யும் ஆராய்ச்சிவிளக்கத்துடன் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா :- ரூ. 3—00

விலாசம் :— நிர்வாக ஆசிரியர்,
உயர்திருவாளர், T. M. குமரகுருபரன் பிள்ளை
B. A., B. L., அவர்கள்
குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

25—10—1972 புதன்கிழமை காலை நிகழ்ந்த
தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி வெள்ளிவிழாவின்
இரண்டாம்நாள் நிகழ்ச்சியில்

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

# வாழ்த்துரை

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

தருமை வளர்த்த தவத்திரு குன்றக்குடி மகாசந்நிதானம் அவர்களே! தருமையாதீனத்தோடு தொடர்புடைய தமிழக முதல்வர் அவர்களே! அறநிலைய அமைச்சர் அவர்களே! மாணவ மாணவிகளே! வெள்ளிவிழாக் காணவந்துள்ள பெரு மக்களே!

இற்றைநாள், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி வெள்ளி விழாக் கொண்டாட்டத்தின் இரண்டாவது திருநாள். இத்திரு நாள், மிகச் சிறந்த முறையில், வானவர் மாரி நல்க – உடலும் உள்ளமும் குளிரும் வண்ணம் கொண்டாடப்படுகிறது. குரு வருள் நம்மையெல்லாம் எவ்வாறு இயக்குகின்றது என்பதை இவ்விழா நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது.

கயிலைக் குருமணி அவர்கள் கலைஞர் அவர்களைக் கொண்டு வெள்ளி விழாவை நடத்தத் திட்டமிட்டிருந்தார்கள். அவர்கள் எண்ணம் இன்று நிறைவேறுகின்றது. அவர்கள் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டிய கடமையும் பொறுப்பும் நமக்கு உண்டு.

கயிலைக் குருமணி 25 ஆவது குருமூர்த்தியாக விளங்கிய வர்கள். 25 என்ற எண்ணிக்கை மிகச்சிறந்த ஒன்று. மாகேசுவர மூர்த்தம் 25. அவை மதுரைத் திருக்கோயிலில் ஸ்ரீ சொக்கநாதர் சந்நிதியில் நந்தி மண்டபத்தில் 25 சிவ முகூர்த்தங்களாகச் சிற்பங்களாகத் தூண்களில் செதுக்கப்பெற்று விளங்குகின்றன.

கயிலைக் குருமணி 25 ஆண்டுகளுக்குமேல் அருளாட்சி செலுத்தினார்கள். அவர்கள் கை வண்ணத்தால் தோன்றிய இக்கல்லூரியும் பூத்துக் காய்த்துக் கனிந்து இன்று 25ஆண்டு நிரம்பப்பெற்று வெள்ளிவிழாக் காணுகிறது. இங்கே கனிந்த ஒருகனி நமது குன்றக்குடி மகாசந்நிதானம் ஆவார்கள். நாமும், காசிவாசி அவர்களும் இங்கே உருவானவர்களே.

கயிலைக் குருமணி அவர்கள் அஸ்த விசேஷம் உடையவர்கள். இந்த ஆதீன அருளாட்சியில் பொற்காலம் தோற்றுவித்தவர்கள். தங்கள் அருளாட்சிக்கு உட்பட்ட 27 திருக்கோயில்களையும் தெய்வ மணம் கமழும் கலைக் கோயில்களாக மாற்றி - 27 விண்மீன்களாக விளங்கச் செய்தவர்கள். அவர்கள் தூய உள்ளம் தோற்றிய பல்கலைக் கல்லூரி, பண்புமிக்க நல்ல பல புலவர்களை உருவாக்கியது. செயல்களின் சிறப்புக்கள் யாவும் உள்ளத்தைப் பொறுத்தே அமையும். அவர்களது தூய பக்தி உள்ளத்தின் சிறப்பிற்கு, பெறலரும் பேருகக் காசியம்பதியில், உடல்நலங் குன்றாது அமர்ந்த நிலையில் இறையடி சேர்ந்த நிகழ்ச்சி ஒன்றே சான்றாகும். முப்பது மணி நேரத்தில் ஈராயிரம் கல் தொலைவைக் கடந்து அவர்கள் திருமேனி தருமைக்கு வந்து சேர்ந்த சிறப்பிற்கு அவர்கள் உள்ளமே காரணம். அவர்கள் திருவுள்ளம் நினைந்தன யாவும் முறையாக நிறைவேறி வருகின்றன.

இன்று 25 ஆம் தேதி, இந்நன்னாளில் 25 ஆவது ஆண்டு வெள்ளிவிழா வந்து அமைந்ததைத் திருவருளின் விளக்கமாகவே கருதுகின்றோம். இங்கே, இன்றைய விழாவைச் சிறப்பிக்க வந்திருக்கும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் நம் தருமையாதீனக் குடிமக்களில் ஒருவராவார். அவர்கள் தந்தையார் நமது ஆதீனத்துத் திருக்குவளை தேவஸ்தானத்துக் கோயில் பணிகளில் பணியாற்றியவர். நம்முடைய ஆதீனக் குடிமக்களில் ஒருவர் தமிழ் நாட்டின் தலைமகனாக விளங்குவது குறித்து நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

கலைஞர் அவர்கள் தமிழ்மொழி – நாகரிகம் – பண்பாடு – கலை இவற்றிற்காகவே பாடுபட்டு வருகிறார்கள். கடந்த ஒன்றரை ஆண்டாக அவர்களை நாம் இவ்விழாவிற்கு அழைத்து வருகிறோம். திருநாளைப் போவாரைப்போல் வருகிறேன் வருகிறேன் என்றே அவர்களும் நாட்களைத் தள்ளிவந்தார்கள். உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்ற வாக்கிற்கு ஒப்ப, நம்கொள்கைவேறு; அவர்கள் கொள்கைவேறு என்று கருதி அவர்கள்

இங்கே வருதற்குத் தாமதித்திருக்கலாம். மடாதிபதிகள் இன்றைய அமைச்சர்களுக்குப் பொன்னுடை போர்த்துவதைப் பற்றிப் பழுத்த அரசியல்வாதி ஒருவர் குறிப்பிட்டுப் பேசியுள்ளார். இது பற்றிய ஓர் உண்மையைக்கூற விரும்புகிறோம்.

நாம்மட்டுமல்ல, மடாதிபதிகள் எல்லோரும் ஆட்சித்தலைமை ஏற்றிருப்போரை மதித்துச் சிறப்பிக்கும் கடமை உடையவர்கள். இம்மதிப்புத் தனிமனிதர்களுக்குத் தரப்படுவதல்ல. தலைமை ஆற்றலுக்குத் தரப்படுவதாகும். ஒப்பற்ற பரம்பொருளை, 'இறைவன், கடவுள், இயவுள்' என மூன்று சொற்களால் நம் முன்னோர் குறித்தனர். 'இறைவன் – எங்கும் நிறைந்திருப்பவன்; கடவுள் - எல்லாவற்றையும் கடந்து நிற்பவன்; இயவுள் - வழியாக இருந்து நம்மை நல்வழிப் படுத்துகின்றவன்' என்பன இவற்றின் பொருள். எங்கும் வியாபித்திருக்கும் அந்தச் சக்தி ஓராண்டாக நம்மைப்பற்றி நிற்கிறது. இவ்வாற்றலே உலகத்தை, விண்மீன்களை, சுடர்களை, அண்டகோளங்களை இயக்குகின்றது. அவ்விறையருளின் - ஆட்சி முறையின்-அடையாளமே முதல்வர். அவர் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்ட உடனேயே - இறைமையாற்றல் அவர் வழி இலங்கத் தொடங்கிற்று என்பது கருத்து. அவ்வாற்றலையே போற்றவும், சிறப்பிக்கவும் செய்கிறோம். ஆற்றல் பலர் மூலம் உலகில் விளங்குவது கண்கூடு. சிவனது ஆற்றல் தலைமையாகவும், விநாயகர்; முருகன் போன்ற இறையவர் ஆற்றல் துணையாகவும் விளங்குவதுபோல முதல்வர் சிவன்போல என்றால், நம் அறநிலைய அமைச்சரை விநாயகர் போலக் கொள்ளலாம். 'திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே' என்பது ஆழ்வார் வாக்கு. இறைவனுடைய அருட்சக்தி ஆட்சித்தலைவர்கள் வழிநின்று நிலவுவதால்தான் நாம் அவர்களைச் சிறப்பித்து வரவேற்கிறோம்.

இங்கே அமைச்சர்களுக்குப் பொன்னுடை போர்த்திச் சிறப்பித்தோம். அது வெறும் ஆடம்பரத்திற்காக அல்ல. ஒரு தத்துவம் அதில் இருக்கிறது. பொன், பயன் கருதாத தன்மையுடையது.

"பொன்னால் பிரயோசனம் பொன்படைத்
தார்க்குண்டு பொன்படைத்தோன்
தன்னால் பிரயோசனம் பொன்னுக்கங்
கேதுண்டு அத்தன்மையைப்போல்
உன்னால் பிரயோசனம் வேணதெல்
லாமுண்டு உனைப்பணியும்

என்னுல் பிரயோசனம் ஏதுண்டு
காளத்தி யீசுரனே ",

என்பது பட்டினத்தார் திருவாக்கு. இது கருதியே அப்பர் பெருமாலும் இறைவனின் கைம்மாறு கருதாது அருள் வழங்கும் திருவடிகளைப்

" பொன்னுர் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம் "

என்று சிறப்பித்தார், எனவேதான் பயன் கருதாத தொண்டர்களுக்குப் பயன்கருதாத பொன்னுல் இழைக்கப்பெற்ற ஆடையை அணிவிக்கின்ருேம். கடமை போற்றிக் கண்ணியம் காத்துக் கட்டுப்பாட்டுடன் விளங்கும் நம் முதல் அமைச்சர், தமக்கு உடல்நிலை சரியில்லாத போதிலும் நம் பல்கலைக் கல்லூரியின் வெள்ளிவிழாவில் விழா மலரை வெளியிட்டு அறிவுரையாற்ற வருகைதந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. அவர்களை அன்போடு ஆசிகூறி வரவேற்கிருேம்.

இங்கே அறநிலைய அமைச்சர் அவர்களும் வந்திருக்கிருர்கள். அவர்களும் நம்மோடு தொடர்புடையவர்களே! இறையவர் திருக்கோயில்களை எல்லாம் ஆளுகின்ற வாய்ப்பு அவர்களுக்கு வாய்த்திருப்பதே ஒரு சிறப்பாக விளங்குகின்றது. அவர்களுக்கு நம்மோடு உள்ள தொடர்பு மண்ணுல் இல்லை என்ருலும், விண்ணுல் - கண்ணுல் ஏற்பட்டதாகும். அவர்கள் பெயரோ கண்ணப்பன். பெரியபுராண அடியார்களுள் கண்ணப்ப நாயனுரை ஒத்த சிறப்பு வேறு எவர்க்கும் இல்லை. 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்' என்று மணிவாசகர் பாராட்டுவர். அந்த அடியார் பெயரைத் தாங்கிய அறநிலைய அமைச்சர் அவர்களும் விழாவில் பங்கேற்பது மகிழ்ச்சி தருவதாகும். அவர்களையும் அன்போடு ஆசிகூறி வரவேற்கிருேம்.

வெள்ளிவிழாக்காணும் நம் பல்கலைக் கல்லூரி தனிச்சிறப்புடையது. முதற் சிறப்பு இங்கே பணியாற்றும் ஆசிரியர்கள் இங்கேயே பயின்றவர்கள். தங்களுக்குள் எவ்வித பிணக்கும் இல்லாது பணியாற்றும் சிறப்பு வேறு எங்கும் காணமுடியாததாகும். மற்ருெரு சிறப்பு, மாணவர்களும் - மாணவியர்களும் ஒருங்கு பயிலும் இக்கல்லூரியில் எவ்விதமான பிரச்சனைகளும் கிடையாது என்பது.

இவ்விழா நன்னுளில் மாணவ - மாணவியர்களுக்கும், பயின்ற பழைய மாணவர்களுக்கும், விழாவில் பங்குபற்றும் அனைவருக்கும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருள் பெருகப் பிரார்த்திக்கின்ருேம்.

25—10—1972 புதன்கிழமை காலை நிகழ்ந்த
தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி வெள்ளிவிழா இரண்டாம்நாள்
நிகழ்ச்சியில்

## வெள்ளிவிழா மலரை வெளியிட்டுத்

தமிழ்நாடு முதலமைச்சர், தமிழவேள்

## டாக்டர், கலைஞர், மாண்புமிகு. திரு. மு. கருணாநிதி

அவர்கள் ஆற்றிய

# விழாப் பேருரை

தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களே! தருமபுரம் ஆதீனகர்த்தர் அவர்களே! அறநிலைய அமைச்சர் அருமை நண்பர் கண்ணப்பன் அவர்களே! சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களே! பெரியோர்களே! ஆசிரியப் பெருமக்களே! மாணவ - மாணவியர்களே! இன்று இங்கே சிறப்பாக நடை பெற்றுக்கொண்டிருக்கும் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியின் வெள்ளிவிழாவில் கலந்து கொள்வதில் உண்மையிலேயே பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். ஆதீனகர்த்தர் அவர்கள் நான் இங்கே பலநாள் கழித்து வந்ததைக் குறிப்பிட்டு, இங்கே வர் ஐயப்பாடு கொண்டிருந்ததாகக் குறிப்பிட்டார்கள். அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். படாதிபதிகள் அழைப்பினை ஏற்பதில் உள்ள ஐயப்பாட்டைவிட, மடாதிபதிகள் அழைப்பை ஏற்பதில் உள்ள ஐயப்பாடு குறைவானதுதான்.

இங்கே உரையாற்றிய ஆதீனகர்த்தரவர்கள் நான் ஆதீனக் குடிமகன் என்றும் என் தந்தையார் ஆதீனத்துக்குக் கட்டுப்பட்ட திருக்குவளை கோயில் பணிகளில் தொடர்புகொண்டிருந்தார் என்றும் குறிப்பிட்டார்கள். அக்காலத்தில் அக்கோவிலில் நவக்கிரஹங்களுக்கு மண்டபம்ஒன்றுகட்டிக் கும்பாபிஷேகம் செய்வித்தார்கள். அவ்வூரில் உள்ள நவக்கிரகங்கள் ஒரே வரிசையில் ஒரே திசை நோக்கியே அமைக்கப்பட்டிருக்கும். கும்பாபிஷேகங்களில் சுவாமி புறப்பட்டுவந்து தட்டிசுற்றி (திருஷ்டிசுற்றி) செய்வதற்கு முற்பட்ட நேரத்தில் நவக்கிரஹங்களுக்கு எனப் பாடல்கள் இல்லை என்ற பேச்சு வந்தது. உடனே அங்கிருந்த என் தந்தையார் “ஞாயிறு திங்கள் செவ்வாய், புதன் வியாழன் வெள்ளி, சனி பாம்பிரண்டு என்ற நவகோள்களும் நல்லன செய்திடும், வழிபட நலமாக முடிந்திடுமே” என்ற கருத்தமைத்து ஒரு பாடல் இயற்றிப் பாடினர். தட்டி சுற்றி செய்து முடிந்தது.

இதேபோல உடனுக்குடன் கவிதை புனைந்து பாடும் அவருடைய ஆற்றலுக்குப் பல சான்றுகள் கூறமுடியும். அத்துடன் நகைச்சுவையாகக் கவிபாடுவதிலும் அவர் வன்மை பெற்றிருந்தார். இசைஞானம் நிரம்பப் பெற்றிருந்த அவர் விவசாயத்திலும்

ஈடுபாடுகொண்டிருந்தார். திருக்குவளையில் எங்கள் வீட்டுக்கு அண்மையில் உள்ள நிலத்தில் என் தந்தை உழவுசெய்ய, என் தாய் நடவுநட விவசாயம் நடைபெற்ற நாட்கள் பசுமையாகவே என் நினைவில் நிற்கின்றன.

எனவே, என்னோடு கவிஞர்கள் யாரேனும் போட்டிக்கு வந்தால், கவிஞன் மகன் என்ற முறையில் எதிர்நிற்பேன். விவசாயிகள் போட்டியிட்டால், ஒரு விவசாயியின் மகன் என்ற முறையில் அவர்களைச் சந்திப்பேன். இசைவாணர்கள் போட்டிக்கு வந்தால் நேரடியாக முடியாவிட்டாலும் என் தந்தையார் பெயரைச்சொல்லித் தப்பித்துக்கொள்வேன்.

தமிழும், தமிழ்க் கவிதைகளும் எங்கெங்கே பாராட்டப்படுகிறதோ, எங்கெங்கே பரப்பப்படுகிறதோ, அது சைவ மடமாக இருந்தாலும் சரி, சைவ, வைணவ, பௌத்த ஆலயங்களாக இருந்தாலும் சரி, சுயமரியாதைக் கழகமாயிருந்தாலும் சரி, அண்ணாவின்பெயரால் தழைத்தாலும் சரி தமிழ் வளர்க்கப்படுமானால் அதனை என் இடமாகக் கொள்வேன். அங்கே செல்லத் தயக்கமேகாட்டமாட்டேன். அந்த அடிப்படையில்தான் கல்லூரி வைத்துத் தமிழ் வளர்க்கும் இங்கே வந்துள்ளேன்.

தருமை ஆதீனகர்த்தர் அவர்கள் குளிர்ந்த தமிழில் எல்லாவற்றிற்கும் மேம்பட்ட சக்தி ஒன்று இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். நாங்கள் அதனை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாகவே இருந்து வந்திருக்கிறது.

இங்கே பேசிய குன்றக்குடி, தருமை ஆதீனகர்த்தர்கள் தமிழர்களிடையே காணப்படும் ஒற்றுமையின்மை பற்றிக் குறிப்பிட்டார்கள். தமிழ் நாட்டில், தமிழ் மக்களிடையே ஒற்றுமையை வளர்த்து, ஒற்றுமையின்மையைப் போக்க வேண்டுமென்பதனையும் வெளியிட்டார்கள். ஒவ்வோர் இனத்திற்கும் ஒரு சிறப்புண்டு. ஒற்றுமையின்மையே தமிழரினத்தின் சிறப்பு அடையாளமாக இருந்து வருகிறது. இவர்கள் இந்தச் சிறப்பை வேண்டாம் என்கிறார்களே! இது எனக்குப் புரியவில்லை. ஒற்றுமை உருவாகவேண்டுமென்பதிலே இரண்டு கருத்து இருக்கமுடியாது.

ஒருவர் என்னைப்பார்த்துத் "தமிழ் வேண்டுமா? தனித்தமிழன் வேண்டுமா" என்று கேட்டால், "தமிழ்தான் வேண்டும்" என்பேன். ஏனெனில் கோடானுகோடி தமிழர்களை உருவாக்கும் நிலை தமிழ்த்தாய்க்கு முடியும்.

இதற்குமுன் இருந்த ஆதீனகர்த்தரைப்பற்றி இங்கே கசிவோடு குறிப்பிட்டார்கள், பொன்வைத்த இடத்தில் பூவாவது வைக்கவேண்டுமென்பது பழமொழி, ஒருவர் இடத்தை இன்னொருவர் நிரப்ப முடியாவிடில் பலராக இணைந்து, பிறர்

துணையோடாவது அதனை நிறைவித்தே ஆகவேண்டும். எரிந்துகொண்டிருந்த மின்விளக்குகள் திடீரென இங்கே அணைந்துபோனதை இப்போது கண்டீர்கள். உடனே சோர்ந்து உட்கார்ந்து விடவில்லை. இந்த பெட்ரோமாக்ஸ் விளக்குகளை ஏற்றிவைத்துக்கொண்டு நிகழ்ச்சிகளை நடத்துகின்றோம். கரெண்டின்மூலம் மின்சார விளக்குகள் எரியும். அதேபோல மின்விளக்காக இருந்தவர் எங்கள் அண்ணா. மின்சாரவிளக்கு இல்லாதபோது ஏற்றப்பட்ட பெட்ரோமாக்ஸ் விளக்குத்தான் நான். பெட்ரோமாக்ஸ் விளக்குக்கும் ஒளிதரும் தன்மை உண்டு. ஆனாலும் அதற்கு அடிக்கடி காற்று அடிக்கவேண்டும். அந்தக் காற்றாக நீங்கள் இருந்தால்தான் நான் ஒளி பெற முடியும்.

அந்த ஒளியின் ஒரு இடமாகத் தருமபுர ஆதீனம்இருக்கிறது. ஆகவேதான் இங்குவந்தேன். தமிழ்ச்சுவை உண்டேன்.

இங்கே பயிலும் மாணவர்களது கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு பற்றி ஆதீனகர்த்தர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இத்தகு நன்நெறியை எல்லாமாணவர்களும் போற்றி வாழ்ந்தால் தமிழ்ச் சமுதாயம் உலகத்திற்கே வழிகாட்டியாகத் திகழமுடியும். உங்கள் வாயிலாக மாணவர் சமுதாயத்திற்கு நான் குறிப்பிட விரும்புவது இதுவே.

இக்கல்லூரியில் பயின்று நாடறிய உயர்ந்தவர்களாக ஏழு அல்லது எட்டுப் பேரைக் குறிப்பிட்டார்கள். இத்தொகை நீண்டு கொண்டே இருக்கவேண்டும். இக்கல்லூரி தோன்றியிருக்கா விட்டால் தமிழால் உணர்ச்சியூட்டி வரும் குன்றக்குடி அடிகளார் அவர்கள் மேலவையிலும், மேடைகளிலும் இந்த அளவுக்குச் சிறப்பாக உருவாகியிருக்க மாட்டார்கள்.

இங்கே இருக்கும் ஆதீனகர்த்தர் அவர்கள் சென்னையில் இருக்கும்போது அவர்களை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புக்களை நான்பெற்றிருந்ததுண்டு. தற்போது இங்கேயே இருந்து தொண்டாற்ற வேண்டிய கடமை அவர்களுக்கு ஏற்பட்டிருக் கிறது. உலகத்தை நன்கு அறிந்தவர்கள் ஆதலால் காலத்திற் கேற்ற தொண்டுகளில் அவர்கள் நாட்டம் செலுத்துவார்கள்.

வெள்ளிவிழா நினைவாக ரூபாய் 25 ஆயிரம் அறக்கட்டளை நிறுவி, அதனையும் என்னைவிட்டே உங்களுக்கு அறிவிக்கச் சொல்லியுள்ளார்கள். மகிழ்ச்சியோடு இதனை அறிவிக்கிறேன். 25ஆவது ஆண்டு என்பதால் 25 ஆயிரம் வைத்துள்ளார்கள். இது பொன்விழாவாக இருந்தால் 50 ஆயிரம் வைத்திருப் பார்களே என எண்ணுகின்றேன்.

தமிழ்க்கல்வி சிறக்கவும், தமிழ் மாணாக்கர் மேன்மை பெறவும் வாழ்த்தி, இத்தகு வாய்ப்பினைத் தந்த குன்றக்குடி அடிகளார் அவர்களுக்கும், ஆதீனகர்த்தர் அவர்களுக்கும் மீண்டும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி வெள்ளிவிழாவை
24—10—1972 செவ்வாய்க்கிழமையன்று தொடங்கிவைத்த
தமிழ்நாடு ஆளுநர்

**மேதகு. திரு. கே. கே. ஷா அவர்களுக்கு**

அளித்த

# வரவேற்புரை

## அன்பு நெறி பரப்பும் ஆளுநர் அவர்களே வருக! வருக!!

அன்பு உயிர்களெல்லாவற்றிற்கும் உள்ள இயல்பான குணம். அதுவே அனைவரையும் பிணைக்கிறது. இதனையே கடவுள் என்கிறது திருமந்திரம். சிவம் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கிறது செந்தமிழ்நாடு கடவுள் ஒருவர் உண்டு என்பதை, 'நியதி என்ற ஒன்று எதிலும் இருக்கிறது; சூரியன் கிழக்கு வானில் தோன்றி உச்சிவானில் ஊர்ந்து மேற்கு வானில் சென்று மறைவதுவரை நியதி இருக்கிறது. பூமியின் கதியில் இருக்கிறது; ஏன்? காற்று, கடல், வான் அனைத்திலும் இருக்கிறது. அந்நியதி சிறிது தவறினால் என்ன வாகும்! எண்ணிப்பாருங்கள்! அத்தகைய நியதியை நடத்தும் பொருளே கடவுள்' என்று விஞ்ஞானரீதியாக விளக்கிய தங்கள் பேருரை எங்கள் மனத்திற்கு விருந்தாகி விளங்கிக்கொண்டேயிருக்கிறது, இத்தகைய கடவுள் நெறியைக் காலங்காலமாக யுகம் யுகமாகக் கையாண்டு பயனெய்திப் பிற நாடுகளுக்கும் வழிகாட்டும் நாடு நம் பாரத நாடு.

## தொண்டுளம் கொண்ட தூயோய் வருக! வருக!!

அன்பு நெறியைப் போற்றிப் பரப்புவதற்கென்றே அமைந்த நிலையங்கள் திருமடங்கள். பிறந்த மக்களை உழைக்கவைத்து உயர்வளித்து ஊட்டி வளர்க்கும் இறைவனைப் போலவே மடங்களின் தொண்டு அவரவருடைய உழைப்பிற்கேற்ப அமைதியாக நிலைத்த இன்பத்துடன் வாழவைப்பதுதான் என்பதை இறை உள்ளம் படைத்த யாவரும் நன்கு உணர்வர். அங்ஙனம் பணிபுரிவதில் நமது தருமையாதீனம் சிறந்து விளங்குகிறது. மனவளர்ச்சியே மக்கள் வளர்ச்சி. மன வளர்ச்சியோ கல்வி வளர்ச்சியைப் பொறுத்துள்ளது, கல்வி கடவுள் உணர்ச்சியோடு கலந்து வளர்ந்தால்தான் பயன் தரும் என்கின்றார்

வள்ளுவர். அதற்காகவே தொடக்கநிலைக் கல்விமுதல் கல்லூரி வரையிலும் தேவாரப் பண்ணிசைக்கலை முதல் வழிபாட்டுக் கலை வரையிலும் வளரப் பல கல்வி நிலையங்களை அமைத்துப் பாதுகாத்து வருகிறது.

பொதுமக்கள் கல்வி நலம் துய்க்கப் பெரிய நூல் நிலையங்கள் வைத்து வளர்த்து வருகிறது. சமய உண்மை பரவ மக்கள் மனம் கடவுள் நெறியில் உறுதி கொள்ளச் சமயப் பிரசார நிலையங்கள், தேவார வகுப்புக்கள், சித்தாந்த வகுப்புக்கள் ஆங்காங்கே அமைத்துக் காத்து வளர்த்துவருகிறது. இளைஞர் உள்ளத்தில் கல்வி எழுச்சி உண்டாகப் பல பரிசுத் திட்டங்களையும் உறுதி நிதிகளையும் வழங்கி வருகிறது. அன்பர் மனம் ஈடுபட அபிஷேக ஆராதனைகளாலும், தூய்மையாலும் சிறந்து விளங்க ஆதீன ஆட்சியிலுள்ள இருபத்தேழு திருக்கோயில்களையும் தத்துவ விளக்கங்கள் ஆக்கி வருகிறது. பொது நலப் பணிகளாகத் தாய்சேய் நலவிடுதி, சித்த மருத்துவமனை, மூலிகைத்தோட்டம், அநாதை விடுதி முதலான பல துறைகளில் பணியாற்றி வருகிறது. வறட்சி, பஞ்சம், வெள்ளம், பிணி முதலியன உண்டாகும் காலங்களில் மக்கள் தேவைக்கேற்பப் பல உதவிகளைச் செய்து வருகிறது

## சிறந்தது போற்றும் செம்மலே! வருக! வருக!!

இவ்வருள் நிலையத்தின் உயிர்த்துடிப்பாகத் திகழ்வது இக் கல்லூரி. இது இன்றுவரை சற்றேறக்குறைய ஐந்நூறு புலவர்களைத் தெய்வ சிந்தனை குறையாத செந்தமிழ் உணர்ச்சியுடன் உருவாக்கிச் "சென்றிடுவீர் எட்டுத்திக்கும் சிவநெறி பரப்பிச் செந்தமிழ் வளர்ப்பிர்" என்று அனுப்பியிருக்கிறது. சில வடமொழி சிரோமணிகளையும் உருவாக்கியிருக்கிறது. இக்கல்லூரி ஆதீனத்துத் தம்பிரான் சுவாமிகள் அனைவரும் ஆதீனச் சூழலிலேயே சிறந்த கல்விமான்களாகவும், மற்ற மாணவர்கள் அனைவரும் சமய உணர்வுடன் கல்வி பெறவும் இவ்வாதீனத்தின் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானமாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களால் 2—8—1946இல் திருவருள் துணைக்கொண்டு நிறுவப்பட்டது. இதில் உருவான மாணவர்களில் சிலர் ஆதீனத் தலைவர்களாக விளங்குகின்றனர்; சிலர் முதுகலைப் பட்டங்களும், அறிஞர் (டாக்டர்) பட்டங்களும் பெற்றுக் கல்லூரிப் பேராசிரியர்களாக விளங்குகின்றனர். சிலர் தமிழக அரசின் மேல்சபை உறுப்பினர்களாகவும், அரசியல் தொண்டர்களாகவும் விளங்குகிறார்கள். ஆதீன அடியவர்கள் அனைவரும் ஆதீனத்தின் சார்பில் அங்கங்கிருந்து சிவப்பணியோடு செந்தமிழ்ப் பணியையும் செய்து வருகிறார்கள். இங்ஙனம் வளர்ந்து காளைப்பருவம்

பெற்றிருக்கின்ற இந்தக் கல்வி நிலையம் இருபத்தைந்து ஆண்டுகள் நிரம்பி வெள்ளிவிழாக்கொள்ள இருக்கிறது. அவ் விழாவை ஆதீனத் திருக்கோயில்கள் இருபத்தேழாயிருப்பதால் கல்லூரி பிறந்த இருபத்தேழாவதாண்டில், நிறுவிய கயிலைக் குருமணி அவர்கள் முத்திப்பேறு எய்தியமுதல் ஆண்டு நிறை வில் கொண்டாடுவதும், ஒரு பொருத்தமாகவே தோன்றுகிறது.

வெள்ளி - சுக்கிரன்; மக்கள் வாழ்க்கையில் நேரும் அதிர்ஷ்ட தேவதை. அது விழாத் தெய்வமாகவிளங்கும் காலமே வெள்ளி விழாக்காலம். அதனைத் தொடங்கிவைக்கும் பேறு ஆதீன ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் திருவருளால் தங்களுக்குக் கிடைத்திருக்கிறது.

## வெள்ளிவிழாத் தொடங்கிவைக்கும் வேந்தரே! வருக! வருக!!

தாங்கள் காந்தீயத் தத்துவத்தில் வளர்ந்து தொண்டுளம் பூண்டு நாட்டு வளர்ச்சிக்காக நன்கு உழைத்தவர்கள். வெளி நாடுகளிற் சென்று இந்தியத் தாயின் பெருமையை எடுத்துக் கூறியவர்கள். தங்கள் வாழ்க்கை ஆசிரியப் பணியில் தொடங்கி, வழக்கறிஞர் பணியில் வளர்ந்து, அரசியல் பணியில் வளம் பெற்று இன்று பல்கலைக்கழக வேந்தர் பதவியில் உயர்ந்திருக் கிறது. ஆசிரியராயிருந்து, வேந்தராயிருக்கும் தாங்கள் எங்கள் கல்லூரியின் வெள்ளி விழாவைத் தொடங்கி வைப்பது எங்களுக்குப் பெருமைதருகிறது. தங்களை மனமார மகிழ்ச்சி யுடன் துள்ளித் ததும்பும் உள்ளத்துடன் வருக! வருக!! என வரவேற்கிறோம். தங்கள் வருகையால் எங்கள் கல்லூரி, பல துறைகளில் வளர்ந்து தத்துவப் பல்கலைக் கழகமும் ஆகலாம்.

எங்கள் ஞானத் தந்தையாய், இருபத்தாறுவது குருமகா சந்நிதானமாக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் இக்கல்வி நிலையத்தின் மீது கரையிலாக் கருணை பொழிகின்றார்கள் இத்தனைக்கும் ஸ்ரீ செந் தமிழ்ச் சொக்கர் திருவருள் துணைநிற்கிறது என்பதை நினைந்து உளமகிழ்ந்து உவகைகூர்ந்து தங்களை வருக! வருக;! என வரவேற்கிறோம்.

வாழ்க ஞானத்தந்தை! வாழ்க வேந்தர்!! வளர்க எங்கள் கல்வி நிலையம்!!!

இங்ஙனம்,

தருமபுரம்.
24—10—1972.

வெள்ளிவிழாக் குழுவினர்
தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியின் வெள்ளிவிழாவில்

விழாமலரை வெளியிட்டுப் பேருரையாற்றிய

தமிழ்நாடு முதலமைச்சர்

# டாக்டர், கலைஞர். மாண்புமிகு. திரு. மு. கருணாநிதி

அவர்களுக்கு அளித்த

# வரவேற்புரை

**செந்தமிழ் மறவாச் செம்மலே வருக!**

தெய்வத்தமிழ் காலத்தால் மூத்தது; இலக்கியத்தால் ஓங்கியது; மணத்தால் இனியது; திறத்தால் உயர்ந்தது; இலக்கண வரம்பினுல் என்றும் அழியாக் கன்னித் தன்மை வாய்ந்தது. 'பொருப்பிலே பிறந்து, தென்னன் புகழிலே கிடந்து, சங்கத் திருப்பிலே இருந்து வையை யேட்டிலே தவழ்ந்த பேதை' என்று பாராட்டப் பெறுபவள் பைந்தமிழ்த் தாய். தமிழ் நலம் சான்ற தமிழ்க்குடி மக்கள் 'கல்தோன்றி மண்தோன்ருக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த' முதுகுடியினர். தமிழின் நலம் நுகரத் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும் குன்றமெறிந்த குமரவேளும் சங்கத் தமிழின் தலைமைப் புலவர்களாயினர்; தமிழாராய்ந்தனர். சோமசுந்தரபாண்டியராய், தடாதகையாய், உக்கிரகுமாரராய்த் தெய்வக் குடும்பமே தமிழ்ச் சுவை கூட்டுண எழுந்த சிறப்புடையது. கொழுந்தமிழ் - பைந் தமிழ்ப் பின் சென்ருன் பச்சைப் பசுங்கொண்டலாம் பரந்தாமன். இத்தகு தமிழை, தெய்வத் தமிழை அரண்மனைகளில் அரசர்கள் வளர்த்தனர்; அரன்மனைகளாம் சமய நிலையங்களில் மதத் தலைவர்கள் வளர்த்தனர். பிற்காலத்தே — ஞானத்துடன் தெய்வத் தமிழையும் வளர்க்கும் அன்புநெறிப் பண்ணைகளாக ஆதீனங்கள் அருந்தமிழ் காத்துவரும் பெருமை வாய்த்தன.

மக்களிடையே தமிழை எழுத்தாலும் பேச்சாலும் தவழவிட்ட மறுமலர்ச்சிப் பாரம்பரியமும், இலக்கிய பாரம்பரியமும் வாய்ந்த பேரறிஞர் அண்ணு அவர்களின் பிற்ருேன்றலாகத் தமிழக வாழ்வில் எழுந்து தண்ணொளி பரப்பிவரும் தண்டமிழ்க் கவிஞராக விளங்கும் தங்களை இப்பழம்பெரும் ஆதீனச் சார்புத் தமிழ்க் கல்லூரியின் சார்பில் வரவேற்பதில் பெருமிதம் கொள்கின்ருேம்.

தமிழே உயிராய், தமிழினத்தின் எழுச்சியே முழுமூச்சாய், தமிழ் விளக்கமே இதயத் துடிப்பாய் — இயங்கிவரும் செந்தமிழ்க் காவலராம் தங்களை, வருக வருக என்று எம் கல்லூரி வெள்ளி விழா வேளையில் வரவேற்று மகிழ்கின்ருேம்.

**தனித்திறன் படைத்த தலைவரே! வருக!**

அருள் நலம் கனிந்த இருபத்தைந்தாவது குருமாமணியாய் விளங்கிய கயிலைக் குருமணி அவர்கள் திருக்கரத்தால் துவக்கப் பெற்ற இக்கல்லூரி இன்று வெள்ளிவிழாக் கொண்டாடுகின்றது. 460 தமிழ்ப் புலவர்களை உருவாக்கித் தமிழ் கூறு நல் உலகத்தில் உலவவிட்ட எம் கல்லூரி ஆண்டுதோறும் அரை நூறு அளவில் புலவர்களை உருவாக்கித் தருகின்ற திட்பம் உடையது. தங்கள் அன்பிற்கிசைந்த அரசியல்முனிவர் குன்றக்குடி அடிகளாரையும், தருமையாதீனம் 26ஆவது குருமகாசந்நிதானமாக இன்று விளங்கும் தமிழ்ப்பெரும் புலவராகிய ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களையும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களையும், இல்கல்லூரியின் பழைய மாணக்கர்கள் என்று கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சி எய்துகின்றோம்.

தமிழ் இலக்கியப் பாதையில் – கவிதை, பேச்சு, உரைநடை மூன்றிலும் தமக்கென ஒரு தனி நடைச்சிறப்பை - தனித்திறனை வகுத்துக்கொண்டு வையமறிந்த பெருஞ்சிறப்புப் பெற்றவர் தாங்கள். தங்களைக்கொண்டே வெள்ளிவிழா மலர்ப்பனுவலை வெளியிட வேண்டுமென்று திருவுள்ளம்கொண்ட எங்கள் குருமணியவர்கள் திருவடிகளை நன்றி உணர்வுடன் மன மொழி மெய்களாற் பணிகின்றோம். " இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல் " என்றகுறள் நெறி மாறுக்கோட்பாட்டினை எண்ணி எண்ணிமகிழ்கின்றோம்.

**முத்தமிழ் வல்ல முதன்மைசால் அமைச்சரே வருக! வருக!**

தருமையாதீனத் தொடர்புடையது திருக்குவளைத் திருத்தலம்; அந்தப் புனித மண்தந்த புதுயுக வீரர் தாங்கள்; தொடக்கக் கல்லூரி முதல் பல்கலைக் கழகக் கல்விவரை எங்கும் - எதிலும் தமிழ் தன் உரிய இடத்தைப் பெற்றிட, தமிழர் மொழி வழி வாழ்வு சிறந்திட அல்லும் பகலும் அயராது வழிவகை கண்டுவரும் செயல்வீரர் தாங்கள். " தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சராய் வருதல் வேண்டும் " என்ற புரட்சிக் கவிஞரின் கனவை நனவாக்கிய பேரறிஞர் தாங்கள். தாங்கள் வெள்ளிவிழா மலரை வெளியிட்டுப் பேருரையாற்றும் பேறு எம் பெறலரிய பெரும்பேறு. மீண்டும் மீண்டும் தங்களை நீடுவாழ்க என்று வரவேற்று வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம்,

தருமபுரம், 25—10—1972.

வெள்விழாக் குழுவினர்
தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.

# கடிதங்கள்

கி. வா. ஜகந்நாதன், சென்னை-4
'கலைமகள்' ஆசிரியர். 31—10—72.

தண்டமிழும் சைவமும்நல் விழிகளென வளர்க்கின்ற
தருமை ஞான
ஒண்டிறல்சேர் ஆதீனக் குருமணியாய் எழுந்தருளும்
ஒருவ, நந்தம்
பண்டைமர பொருசிறிதும் பிறழாமல் அறங்காக்கும்
பண்பு கொண்டோய்!
மண்டுபுகழ்ச் சண்முகதே சிகப்பெயர்கொள் பெருமானே!
வணக்கம் சொன்னேன்.

குருபக்தி சிவபக்தி தமிழ்க்காதல் அறம்வளர்க்கும்
கொள்கை யாதி
மருவுற்ற நல்லியல்பு நின்பாலே கண்டுவந்தேன்;
மாண்பார் சைவத்
திருவுற்ற தருமைமடா லயத்தரசாய்ப் பல்லாண்டு
திகழ்ந்து மேன்மேல்
பொருவற்ற பலதொண்டு புரிந்தென்றும் நலம்பெற்றுப்
பொலிந்து வாழி!

* * * *

வைட் ஸ்டார், 89, கடைவீதி, சேலம்-1,
மில் துணி வணிகம். 1—11—1972

உள்ளங் கரைய உடல்கரைய ஆனந்த
வெள்ளங் கரைபுரண்டு மேலாகக் - கள்ளமலம்
பொய்யாக என்னுட் புகுந்தவா றென்கொலோ
ஐயா தியாக விநோதா.

— குருஞானசம்பந்தர்.

பேரன்பும் சிவமுமேயான ஸ்ரீ தருமை திருவார் குருமணி அவர்கள் பொன்னார் திருவடிக்கு அடியேன் சேலம் ஆர். அங்கண்ணனின் வணக்கம் பலப் பல.

இன்று திருவார் குருமணியவர்கள் ஞானபீடம் அமர்ந்தருளிய பொன்னாள். ஞானசம்பந்த மூர்த்தியைப்போல் இந்த ஓராண்டில் எல்லோருக்கும் அன்பும் அருளும் பாலித்தருளி

இறைவழிபாடு செய்ய வைத்தருளினீர்கள். செந்தமிழ்ச் சொக்க ரருளால் பல க்ஷேத்திரங்களுக்குக் குடமுழுக்குகள் முதலிய அற்புத வைபவங்கள் நடைபெறும் வகையில் அரசினர் உள்ளத்திலும் பொதுமக்கள் மனத்திலும் ஆசை ஏற்படுத்தி யருளினீர்கள்.

இன்னும் எத்தனை எத்தனையோ அதிசயிக்கத்தக்க அருட் செயல்கள் ஏற்பட்டுள்ளன.

அண்ணல் சொக்கநாதனருளால் திருவார் குருமணி அவர்கள் இன்னும் இதேபோல் க்ஷேத்திர, சாத்திர, தோத்திர பரிபாலனம் செய்தருளவும் சைவநீதி நன்கு விளங்கவும் பல்லாண்டு பல்லாண்டு ஞானபீடத்தில் இனிது அமர்ந்தருளி, சகலரையும், காப்பாற்றியருள ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்களின் பொன்னார் திருவடியே இந் நன்னாளிலும் எப்போதும் வணங்குகின்றேன்.

ஆறுதலை இல்லை அடியேனுக் கன்பாகத்
தேறுதலை சொல்வார்சிலர் இல்லை – வேறெனக்குத்
திக்காரும் இல்லை சிவனே பழிக்கஞ்சி
சொக்கேநின் தாளே துணை.

— ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

* * * *

டாக்டர், மா. நடராசன், சென்னை - 10,

31—10—72.

தருமையாதீனத் தவமுனிவர் அவர்கட்கு எனது பணிவன்பான வணக்கங்கள்.

தாங்கள் 26-வது மகாசந்நிதானமாக ஞானபீடமேறி, 12 திங்கள்கள் இன்றுடன் நிறைவு பெறுகிற நன்னாளில் அடியேனுடைய உள்ள மகிழ்வைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்களின் சீரிய சிவப்பணிக்கும் தமிழ்ப்பணிக்கும் தக்க சான்றுக்குச் சில தினங்களுக்குமுன் நமது குருமணியாம் கயிலை கண்ட நன்மணிக்கு ஆலயம் எழுப்பி, குடமுழுக்கிட்டு, குருபூசையும், ஆண்டு நிறைவும், நல்லோர் ஏத்தும் வகையில் பாங்குறச் செய்து பரவசமடைந்தீர்கள். தங்களின் குருபக்தி அளவிடற்கரியது; மலையினும் உயர்ந்தது, கடலினும் ஆழ்ந்தது தங்கள் கடமையுணர்ச்சியைக் கண்டு, அம்மா! பெரிதென்று அகமகிழ்ந்தேன்.

நம் குருமணி அவர்களின் செயற்கரிய சேவைகளை - தொண்டுகளை - கட்டிக்காத்து, பேணி வளர்த்து, நம் மடாலய மரபு காத்து, நெறி வழுவாது தாங்கள் இவ்வோராண்டிலே செய்துள்ள சீரிய பணியே, இனி வருங்காலத்தின் ஏற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் வளமை நல்கும் வழியாகும்.

கயிலை கண்ட குருமணிபோல் தாங்களும் அதே அன்பையும், அரவணைப்பையும் ஆசியையும் எனக்கு அள்ளி வழங்குவது கண்டு உள்ளம் நெகிழ்கின்றேன்.

செந்தமிழ்ச் சொக்கர் தங்களின் திருத்தொண்டிற்குப் பல் வகையாலும் துணை நிற்பார் என நினைத்துத் தங்களின் பாத கமலங்களுக்கு எனது வாழ்த்தையும், வணக்கங்களையும் படைக்கின்றேன்.

---

## கார்த்திகை தீபம்

### புலவர். திரு. இரா செல்வக்கணபதி

ஒழிந்தது அழுக்கு; உள்ளம் வெளுத்தது;
எழுந்தது ஞானம்; ஏற்றுக தீபம்!
கழிந்தது துன்பம்; கவலை அகன்றது
கருத்து மலர்ந்தது; காட்டுக தீபம்!
ஆற்றல் விளைந்தது; அறிவு மலர்ந்தது
அன்பு செழித்தது; இன்புறு தீபம்
வெற்றி சிறந்தது; வீரம் விளைந்தது
கொற்றம் மலர்ந்தது; கொளுவுக தீபம்!
துன்பம் அகன்றது; இன்பம் எழுந்தது
தூய்மை சிறந்தது; துலங்குக தீபம்!
அன்பு மலர்ந்தது; ஆர்வம் சிறந்தது
அறிவு கொழித்தது; அகலுக தீபம்!
கார்த்திகை வந்தது; நேர்த்தி சிறந்தது
காட்சி கிடைத்தது; கவினுக தீபம்!
சீர்த்தி செழித்தது; செம்மை விளைத்தது
சிந்தனை பூத்தது; செழித்தது தீபம்!
ஏற்றுக தீபம்; கார்த்திகை நாளில்
இறைமை மலர்ந்தது: எழுச்சிகொள் தீபம்!
போற்றுதும் அண்ணா மலையான் அருளால்
பொங்குக இன்பம்; பொலிகநல் தீபம்!

# செய்திகள்

## தருமையாதீனம் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி திருக்கோயிலில்
## நவராத்திரித் திருவிழா
## 22 ஆவது சதசண்டி வேள்விவிழா

தருமையாதீனம் ஸ்ரீ தருமபுரீசுரர் திருக்கோயிலில் விளங்கும் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு 8—10—72 முதல் தொடங்கி 17—10—72 முடிய நவசத்தித் திருவிழாவும், 22 ஆவது சதசண்டி வேள்வியும் சிறப்பாக நடைபெற்றன. நாடோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் காலை மாலை இருவேளைகளிலும் எழுந்தருளி, சிறப்பு வழிபாடு செய்தருளினர்கள். அம்பிகை சந்நிதியில் வேள்வியும், சுவாசினி குமாரி வடுபூசையும், துர்க்கா சூக்தம் திருமுறைப்பாராயணங்களும் நடைபெற்றன. 16–10–72 அன்று வேள்வி நிறைவுற்றது. 17—10—72 காலை அம்பாளுக்கு யாக கலசாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. ஆனந்த தாண்டவபுரம் ஸ்ரீ இராமதாச அய்யர் அவர்கள் நாடோறும் வழிபாட்டு முடிவில் தேவி மாகாத்மியத்தைச் சிறப்பாகவும், சுருக்கமாகவும் கூறினர். ஆதீனக் கல்வி நிலையங்களின் சார்பில் நாடோறும் 3 மணி முதல் கலைமகள் விழாச் சொற்பொழிவுகள் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் நிகழ்ந்தன.

## திருப்பெண்ணாகடத்தில்
## ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனார் குருபூஜை விழா

ஸ்ரீ மெய்கண்டார் திருவவதாரம் செய்தருளிய திருப்பெண்ணாகடத்தில் உள்ள ஸ்ரீ மெய்கண்டார் திருக்கோயிலில் 5—11—72 அன்று சிறந்த முறையில் அபிஷேக ஆராதனைகளுடன் குருபூசைவிழா கொண்டாடப்பெற்றது.

4–11–72 சனிக்கிழமை மாலை மாயூரம் கணநாதர் பொம்மை நாடகக் குழுவினரின் 'மணிவாசகர் வரலாறு' பொம்மலாட்டம் நடைபெற்றது.

5—11—72 ஞாயிறு காலை ஸ்ரீ மெய்கண்டாருக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தன. மாலை 6 மணி அளவில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருப்பெண்ணாகடத்திற்கு எழுந்தருளினர்கள். தூங்கானைமாடம் சுடர்க்கொழுந்தீசருக்கும் ஸ்ரீ மெய்கண்டாருக்கும் விசேஷ

அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தினர்கள். ஸ்ரீ மெய்கண்டார் திருக்கோயிலுக்கு அன்பர்கள் பலரும் வரவேற்க எழுந்தருளி வழிபாடு நிகழ்த்தினர்கள். 8 மணி அளவில் சைவ சித்தாந்த சாத்திர விரிவுரை நிகழ்ச்சி தொடங்கியது. ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் அருளாசி வழங்கினர்கள். பூம்புகார் பேரவைக் கல்லூரி திரு. வை. இரத்தினசபாபதி அவர்கள் ஓராண்டாக ஞாயிறுதோறும் தொடர்ந்து நிகழ்த்திய சிவஞான போத வகுப்பினை நிறைவு செய்தார்கள். ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் பொன்னுடைபோர்த்தி அருளாசிநல்கினர் கள். தருமையாதீனப்புலவர், மகாவித்துவான், திரு. சி. அருணை வடிவேலு முதலியார் 'உலகம் ஏன்' என்ற தலைப்பிலும் அண்ணு மலைப் பல்கலைக் கழகம் மகாவித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் 'முன்னேறியபின்' என்ற தலைப்பிலும் விரிவுரை நிகழ்த்தினர். மொய்தீன் நாடகக் குழுவினரின் 'சிவதாண்ட வம்' கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

## தருமையாதீனம் சென்னை சமயப்பிரசார நிலையத்தில் குருபூசை விழா

சென்னை தியாகராயநகர் தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தின் சார்பில் 5—10—72 வியாழன் மாலை, சைவசித்தாந்த சந்தான ஆசிரியர்களுள் ஒருவராகிய ஸ்ரீ அருள்நந்தி சிவாச் சாரிய சுவாமிகளின் குருபூசை விழா மிகவும் சிறப்புற நடை பெற்றது. இலங்கை யாழ்ப்பாணத்து நல்லூர்த் திருஞானசம் பந்தர் ஆதீனத்தின் தலைவர் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், விழாவிறகுத் தலைமை தாங்கினர்கள். அதுபோது திருக்கோயில் ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ, எல். அவர்கள் "சிவஞான சித்தியாரும் அருள் நந்தி சிவமும்" என்னும் தலைப்பில் சிறந்ததொரு சொற் பொழிவு ஆற்றினர்கள். அதன்பின்னர்க் கடந்த ஓராண்டுக் காலமாகப் பிரசார நிலையத்தின் சார்பில், "சிவஞான சித்தி யார் வகுப்பு" நடத்திவந்த திரு. ந. ரா. முருகவேள் அவர் களுக்குப் பாராட்டுரை நிகழ்ந்தது. தருமையாதீனம் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அனுப்பியிருந்த அருளாசிப் பரிசில்களை, வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், ஆசிரியருக்கு வழங்கி வாழ்த்தியருளினர்கள். ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள், திரு. கீ. இராமலிங்கனர், திரு. கோ. முத்துசாமிப் பிள்ளை, ஐ. ஏ. எஸ். (ஓய்வு), திரு. சி. என். சிங்காரவேலு முதலியார் ஆகிய அறிஞர்பெருமக்கள், திரு. ந. ரா. முருகவேள் அவர்களுக்கும் பாராட் டுரைகள் வழங்கிச் சிறப்பித்தார்கள். திருமுறை இசையுடன் விழா இனிது நிறைவேறியது.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

## திரு. K. முத்துஜோதிடர்

( பரிதாபிஞு கார்த்திகைமீ 1உ முதல் 29உ முடிய )

( 16—11—72 முதல் 14—12—72 முடிய )

நிகழும் பரிதாபி வருஷம் ஐப்பசி மாதம் 30-ம் தேதி புதன் கிழமை உதயாதி நாழிகை 56-33 க்கு துலா லக்னத்தில் ஸ்ரீ லோகரக்ஷகரான ஸ்ரீ சூரியபகவான் விருச்சிகராசி பிரவேசம் செய்கிறார். அதன் பலன் உலகம் பூராவாகவும் செழிக்கும். விசேஷமாக தக்ஷிண பாரதமும், காவேரிதீரம் சேர்ந்த வள நாடும், ஆந்திரம், மஹாராஷ்ரம். கர்நாடகம் முதலிய தேசங்களும் விசேஷமாக விருத்தி அடையும். துலாராசியில் கார்த்திகை மாதம் 22ம் தேதி முடிய புதன், சுக்ரன், செவ்வாய் இந்த மூன்று பேரும் சேர்ந்து இருப்பதால் மேற்கு தேசங்களில் அநேக தேசங்களில் அமைதிக் குறைவும் துர்பிக்ஷமும் காட்டும். நமது தேசத்திலும் புண்ணிய பூமிகள் தவிர, பலபூமிகளில் இயற்கைகள் மாறுதலாக இருந்துகொண்டு அநேக விதமான ஈதிபாதைகள் ஏற்பட்டுத் தொந்தரவுகளைக் கொடுக்கும். தெய்வபலம் உள்ள தேசங்கள் சுபிக்ஷம் அடையும். கடவுள் காப்பார். சுபம் உண்டாகும்.

### 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். குடும்பத்தில் மங்களகரமான காரியங்களும் அதிக பணச் செலவுகளும் ஏற்படும். படிப்பு விருத்தியாகும். உலகத்தில் பிரசித்தி உண்டாகும். வரவு செலவு சமமாக இருந்துகொண்டு இருக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

### 2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் சமமாக பயனைக்கொடுக்கும். தூர தேச பிரயாணம், உத்தியோகத்தில் மாறுதல் நண்பரால்

பலவிதமான எதிர்பாராத சிரமங்கள் எல்லாம் ஏற்படும். எல்லாக் காரியங்களும் தாமதமாகவே நடக்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾**

மிதுனராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தையே தரும். வம்சவிருத்தி உண்டாகும். தொழிலில் இடம்மாற்றம் உண்டாகும். ஆரோக்யம் உண்டுபண்ணும். நஷ்டதனம் தானாக வந்துசேரும். எல்லாக் காரியங்களும் நன்மையாகவே நடக்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

**4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்**

கடகராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபமான பலனைத்தரும். உலகத்தில் வியாபகமும் தானதர்மம் முதலிய காரியங்களினால் புண்ணியமான பலன்களும் பூர்ணமாக தெய்வசக்தியும் உண்டாகும். இல்லறசுகம் ஓங்கும். தனதான்யம் விருத்தியாகும். புதன், வியாழன் சுபமாகும்.

**5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼**

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். அதிக உழைப்பின்பேரில் விசேஷமான லாபம் ஏற்படும். அனேக நண்பர்களுடைய உதவியும் மேலோர் பெரியோர்களின் ஆசியும் ஏற்படும். வெள்ளி, சனி சுபமாகும்.

**6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½**

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். புத்திராதிகளால் நன்மையும் குடும்ப விருத்தியும் ஏற்படும். ஆரோக்யம் உண்டாகும். நஷ்டதனம் தானாக வந்து சேரும். சிற்சில வியவகாரங்களும் மனஸ்தாபமும் உண்டாகும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

**7, துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾**

துலாராசி 9 பாதங்களும் மிச்ரமான பலன்களைத்தரும். பிதுருகாரியங்களும் நன்றாக நடக்கும். செலவுகள் அதிகமாக இருந்துகொண்டு இருக்கும். பரோபகரமான புத்தியும் இருந்து கொண்டு இருக்கும். தானதர்மங்களால் புண்ணிமான பலன்கள் கிடைக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.